விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி

சங்குநாதம்

சங்கு 26

ஒலி 234 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 25 ஞாயிற்றுக்கிழமை (10.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

GTV Express Parcel.lk
பொதிகள் சேவை
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
(1335) 11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
இங்கிலாந்து - Rs.1400/= அவுஸ்திரேலியா - Rs.1700/=
ஜெர்மனி - Rs.1900/= சுவிஸ் - Rs.2550/=
பிரான்ஸ் - Rs.2000/= இத்தாலி - Rs.2250/=
இல.25, கந்தசாமி கோவில் சாலை, வவுனியா
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Enterprises (Pvt) Ltd | 011 4 654 444

## முல்லைத்தீவு முத்தையன்கட்டில்

# இராணுவத்தால் தாக்கப்பட்டு காணாமல்போன குடும்பஸ்தர்



## குளத்திலிருந்து சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டுப் பகுதியில் இராணுவத்தால் தாக்கப்பட்டு காணாமல்போய் தேடப்பட்டு வந்த இளம் குடும்பஸ்தர் முத்தையன் கட்டுக் குளத்திலிருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)





## அத்துமீறி நுழைந்தவர்களையே இராணுவம் பின்தொடர்ந்தது

### முத்தையன்கட்டுச் சம்பவம் தொடர்பில் இராணுவப் பேச்சாளர் விளக்கம்

(கொழும்பு)

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவ முகாமுக்குள் நுழைந்தவர்களையே இராணுவம் பின்தொடர்ந்து அதில் ஒருவர் அவர்களின் பெற்றோர்களிடம் 23ஆம் பக்கம் பார்க்க

### முத்தையன்கட்டில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

## மூன்று இராணுவத்தினர் கைதாகி விளக்கமறியலில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முத்தையன்கட்டில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் 23ஆம் பக்கம் பார்க்க



வாழ்த்துகின்றோம்



இன்று நடைபெறவுள்ள **தரம் - 5 புலமைப்பரிசில்** பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற வாழ்த்துகின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

## குறிகாட்டுவான் இறங்குதுறையினை அபிவிருத்தி செய்வது தொடர்பில்

### அமைச்சர் பிமல் தலைமையில் நேரடி ஆய்வு

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் இறங்குதுறையினை அபிவிருத்தி செய்வது தொடர்பாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் 23ஆம் பக்கம் பார்க்க



### பொன்னாலையில்

## வாளுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் 23ஆம் பக்கம் பார்க்க

### மன்னாரில் இளம் குடும்பப் பெண் மரணம்

## பணி நீக்கம் செய்யப்பட்ட தாதி உட்பட மூவர் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்பப் பெண்ணின் மரணத்துடன் தொடர்புடையதாக பணி நீக்கம் செய்யப் 23ஆம் பக்கம் பார்க்க




## புங்குடுதீவில் ஆதரவற்று கரையொதுங்கிய படகு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு கடற்கரைப் பகுதியில் ஆட்களற்ற நிலையில் மீன்பிடிப் படகொன்று நேற்றைய தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் கரையொதுங்கியுள்ளது.

ஆட்களற்ற நிலையில் மீன்பிடி வலைகளுடன் படகு கரையொதுங்கிய நிலையில் சம்பவம் தொடர்பில் 23ஆம் பக்கம் பார்க்க

• அரசியல் கட்டுரைகள்
• ஆடி மாநாடு
• வியாசர் பதில்கள்
• கவிதைக் கலசம்
இன்னும் பல அம்சங்களுடன்



சங்குநாதம் உள்ளே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பல்கலைக்கழகத்தின்

# சைவசித்தாந்தத் துறைத் தலைவராக செல்வமனோகரன் நியமனம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்துநாகரிக பீடத்தின் சைவசித்தாந்தத் துறையின் புதிய தலைவராக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருச்செல்வம் செல்வமனோகரன் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை அண்மையில் துணைவேந்தர் பேராசிரியர் சற்குணராசா தலைமையில் கூடியவேளை குறித்த



நியமனத்துக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# இராணுவ ...

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட முத்தையன்கட்டு இடதுகரை, ஜீவநகர்ப் பகுதியைச் சேர்ந்த 32வயதான எதிர்மன்னசிங்கம் கபில்ராஜ் என்னும் 7மாதப் பிள்ளையின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முத்தையன்கட்டுக்குளம் இடதுகரை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் இராணுவ முகாமிற்கு வாருங்கள் தகரங்கள் கழற்ற வேண்டும்எனக் குறித்த பகுதி இளைஞர் ஒருவருக்கு ஒரு தொலைபேசி இலக்கத்திலிருந்து கடந்த 7ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் அழைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

குறித்த இராணுவ முகாம் ஒரு சில நாட்களில் விடுவிக்கப்பட இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ள நிலையில் அவ் இராணுவ முகாமிலுள்ள கட்டிடங்களை அகற்றும் நடவடிக்கையை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் தகரங்கள் தருவதாகக் கூறி அப்பகுதியில் இளம் குடும்பஸ்தருக்கு இராணுவம் ஒருவரால் தொலைபேசியில் கூறப்பட்டுள்ளது.

அதனையடுத்து இரவு ஐவர் சென்றுள்ளனர். இராணுவ முகாமிற்குச் சென்ற இளைஞர்களுக்கு தடிகள், கம்பிகளால் இராணுவத்தினர் துரத்தித் துரத்தி குறித்த இராணுவ முகாமிற்குப் பின்பகுதியாக உள்ள குளம் வரை தாக்கியுள்ளனர். அதனால் என்ன செய்வதென்று தெரியாது இராணுவ முகாமிற்குப் பின்பகுதியாக ஓடித் தப்பி வந்ததாகவும் 20 ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் தாக்கியதாக தாக்குதலுக்கு இலக்காகிய இளைஞன் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இவ்வாறு இளைஞர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை அறிந்து அப்பகுதி மக்கள் குறித்த பகுதிக்குச் சென்றபோது, ஒரு இளைஞனை இராணுவத்தினர் மிகக் கொடூரமாகத் தாக்கிக் கொண்டிருந்ததாக நேரில் பார்வையிட்ட ஊர்மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் இராணுவத்தால் தாக்கப்பட்ட இளைஞனை ஊர்மக்கள் காப்பாறச் சென்றபோது அவர்களையும் இராணுவத்தினர் தாக்க முற்பட்டுள்ளதாக மக்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து ஊர் மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் இடம்பெற்ற பலத்த முரண்பாட்டினையடுத்து இராணுவத்தினர் இளைஞனை ஊர்மக்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் தாக்கப்பட்ட குறித்த இளைஞன் முதுகில் பலத்த காயங்களுடன் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்நிலையில் இராணுவத்தால் தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயிருந்தார்.

காணாமல் போயிருந்த நபரை ஊர்மக்கள் இணைந்து முத்தையன்கட்டுக்குளத்தில் தேடியதுடன் நேற்று முன்தினம் (08) முத்தையன் கட்டுப் பகுதியில் அமைந்துள்ள இராணுவமுகாமிற்கு முன்பாகஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இத்தகைய சூழலிலேயே இராணுவத்தால் தாக்கப்பட்டு காணாமல் போயிருந்த இளம் குடும்பஸ்தர் நேற்றுக் காலை முத்தையன் கட்டுக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7,250,299)


## காணி விற்பனைக்கு

- சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள தனங்களப்பு சந்திக்கு அண்மையில் தென்னை மரங்கள் உள்ள காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளன.
- வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உள்ளது.

(5007)

077 172 1074

## பணியாளர்கள் தேவை

- விற்பனைப் பிரதிநிதிகள்
- கணனி உதவியாளர்
- கணக்காளர் (ஆண்/பெண்)

தொடர்புகளுக்கு

(C-3612)

076 315 6470

## வேலையாள் தேவை

"இயக்கச்சி", "நாவற்குழி" ஆகிய இடங்களில் காணப்படுகின்ற சிவபூமி தோட்டப் பராமரிப்புக்கு வேலையாட்கள் தேவை.

- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- தங்குமிடம் வழங்கப்படும்.

(C-3615)

075 629 0850,077 844 8796

## காணி வீடு விற்பனை கொள்வனவு

யாழ்ப்பாணம், வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளில் வீடு, காணி விற்கவுள்ள உரிமையாளர்கள் மற்றும் வாங்கவுள்ளவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(1425)

076 311 9485
076 050 3863

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 08 . 03 . 1964



மறைவு 11 . 07 . 2025

கடந்த 11.07.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

# அமரர் திருமதி இராசன் றஞ்சிதமலர்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (10.08.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தயவுகூர்ந்து இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இமையாணன் கிழக்கு.
உடுப்பிட்டி.

(C-3619)

தகவல்: குடும்பத்தினர்
077 254 3170

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

- கணக்கு உதவியாளர் ஆண்/பெண் (A/L 3பாட சித்தியுள்ளவர்)
- தளபாட பெயின்ரர்
- வேலை பழக விரும்புபவர்கள்
- தச்சு வேலையாட்கள்

தங்குமிட வசதியும் நிரந்தரமான வேலையும் உண்டு.

ஆர்க் தளபாட நிலையம்

(5012)

021 221 9909,077 300 1763

35, கொட்டைக்காடு வீதி, கோண்டாவில் கிழக்கு (பஸ் டிப்போ அருகாமை)

## Uber வேலை வாய்ப்பு

இப்போது யாழ்ப்பாணத்தில் Uber நிறுவனம் பல வழிகளில் வழங்கிவரும் வேலை வாய்ப்புகளில் சாரதிகள் ஆண் / பெண் யார் என்றாலும் இணையமுடியும்.

நீங்கள் மோட்டார் சைக்கிள் / முச்சக்கர வண்டி / CAR / VAN வைத்திருந்தால் எம்முடன் இணையலாம்.

0707555755 / 0705002051 எனும் எண்ணுக்கு WhatsApp மூலம் தங்களிடம் என்ன வாகனம் உள்ளது என குறுஞ்செய்தி (SMS) அனுப்பவும். தேவையான ஆவண விபரங்கள் அனுப்பப்படும்.

குறிப்பு :-

- பெண் சாரதிகளுக்கு பெண் பயணிகளிடமிருந்து வரும் சவாரி மட்டும் பெறும் முறைமை எம்மிடம் மட்டும் உள்ளது.
- எமது சிறப்பு தன்மை எந்தவொரு சாரதியின் / பயணியின் தொலைபேசி இலக்கமும் யாராலும் பார்க்க முடியாது ஆகையால் பெண் பயனாளிகள் அச்சம் இல்லாமல் Uber சேவையை பாவிக்க முடியும்.

எம்முடன் இணைந்தால் மாதம் 150,000/- க்கு மேலதிகமாக சம்பாதிக்க முடியும்.

(C-239)

எமக்கு நீங்கள் வழங்கும் கமிஷன்
MOTORCYCLE - 0% | TUK - 10% | CAR & VAN - 15%
இதை விட வேறு ஒரு மறைமுக கட்டணமும் இல்லை

Uber Affiliate Jaffna
No.197B, Pungankulam Road, Jaffna
0707555755 | 0705002051 | 0705002052 | 0705002053 | 0705002054 | 0705123125 | 0706123125


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11,000 மெட்ரிக் தொன் நெல் இதுவரை கொள்வனவு

## நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை சிறுபோகத்தில் இதுவரை 11,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்தது.

நாடு நெல் ஒரு கிலோ 120 ரூபாவுக்கும் சம்பா நெல் ஒரு கிலோ 125 ரூபாவுக்கும் கீரி சம்பா நெல் ஒரு கிலோ 132 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுவதாக சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், வவுனியா, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களிலேயே நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதிகளவிலான நெல் அம்பாறை மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் தெரிவித்தார். (நி)

# புலமைப்பரிசில் பரீட்சை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை இன்று நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இது குறித்து பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தலைமையில் நேற்றுக் காலை ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெற்றது. இதன்போது கருத்து வெளியிட்ட பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சை காலை 9.30 மணிக்கு ஆரம்ப மாகவுள்ளது.

எனினும், அனைத்து மாணவர்களும் காலை 8.30 மணிக்குள் அந்தந்த பரீட்சை நிலையங்களுக்கு சமூகமளிக்க வேண்டும். மாணவர்கள் காலை 9 மணிக்குள் பரீட்சை மண்டபத்தில் அமர வேண்டும். இரண்டாம் பகுதி வினாத்தாள் முதலில் மாணவர்களுக்கு வழங்கப்படும். இரண்டாம் பகுதி வினாத்தாள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி 10.45 மணிக்கு நிறைவடையும். அதன் பிறகு அரை மணி நேரம் இடைவேளை வழங்கப்படும். முதலாம் பகுதி வினாத்தாள் காலை 11.15 மணிக்கு வழங்கப்படும். இந்த வினாத்தாள் ஒருமணி நேரம் கொண்டதாகும். குறித்த வினாத்தாள் மதியம் 12.15 மணிக்கு நிறைவடையும். பரீட்சை இடம்பெறும் சந்தர்ப்பங்களின் போது ஏதேனும் அவசரநிலைகள் ஏற்பட்டால், 117 என்ற துரித இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடு அளிக்கலாம். இதற்காக விசேட திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (8)

# குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் அதிகரிப்பு

## குற்றவியல் நிபுணர் தம்மிக்க சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**இதுவரை குற்றச் செயல்களில் ஈடுபடாத இளைஞர்கள் அவ்வாறான செயல்களில் ஈடுபடுவது தற்போது அதிகரித்து வருவதாக இலங்கை பொலிஸ் பயிற்சி கல்லூரியின் வெளிவிரிவுரையாளரும் குற்றவியல் நிபுணருமான டி.எம்.எஸ். தம்மிக்க பண்டார தெரிவித்துள்ளார்.**

கடந்த காலங்களில் துப்பாக்கிச் சூடு மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் குறித்து நடத்தப்பட்ட ஆய்வுகள் இந்த போக்கை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் சுமார் 40 இளைஞர்கள் புதிதாக குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகவும், கடந்த சில மாதங்களில் 40-50 புதிய குற்றவாளிகள் உருவாகும் நிலை பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் இளம் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் நிகழும் குற்றங்களை சர்வதேச மட்டத்துடன் ஒப்பிடும்போது, அவை குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுவதாகவும், இது இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் சமூக வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும், குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்கள் ஆய்வுகளுக்குப் பின்னர் முதல் தர குற்றவாளிகளாக சிறையில் அடைக்கப்படுகின்றனர் எனவும் இது சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயங்கரமான பேரிழப்பாகும். ஒரு நிரபராதியை சிறையில் அடைத்து, மறுவாழ்வு செய்யும் செயற்பாட்டில், அவர் சமூகத்தில் பெயர் தெரியாத நபராக மாறுகிறார் எனவும் இது நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் தடையாக உள்ளது, எனவும் தம்மிக்க பண்டார கவலை தெரிவித்தார். (நி)

# போதைப்பொருள் பாவனை நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் சில பிரதேசங்களில் போதைப்பொருளுடன் தொடர்புடைய செயற் பாடுகள் சாதாரணப்படுத்தப்படுவதாக, மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் நிகழ்சித்திட்ட அதிகாரி நிதர்சனா செல்லத்துரை தெரிவித்தார்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்கள் நாட்டில் அதிகரித்து வரும் நிலையில், போதைப்பொருள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (நி)


மணிவிழா காணும் நாயகியை வாழ்த்துகின்றோம்

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி

செல்வி. இந்துமதி வல்லிபுரம்
(ஆசிரியர்)(SLTS-I)
("இசைக்கலைமணி", "சங்கீத வித்வான்")

எமது பாடசாலையில் சங்கீத பாட ஆசிரியராக பணியாற்றி 10.08.2025 அன்று ஓய்வு பெறும் எமது ஆசிரியரை உளமார வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்
- யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், மட்டுவில் (15.07.1998 - 31.12.2001)
- யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி (01.01.2002 - 25.09.2003)
- யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை (26.09.2003 - 31.12.2013)
- யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி (01.01.2014 - 09.08.2025)




இசையோடு எம்மை வசமாக்கி, ஆசிரிய சேவையில் செயல் வீராங்கனையாய், கண்டிப்பில் தாயாய், அறிவினில் ஆதவனாய் சிந்தையின் வடிவமாய் சிறப்புற பணியாற்றி பணிநிலை தன்னிலே ஓய்வாய், மணிவிழாக் காணும் உங்களை ஓய்வு காலம் சிறப்புற ஓய்வில்லா உம்மை பொது இனிதே வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 505
10.08.2025


# அரசை வீழ்த்த சூழ்ச்சி செய்கின்றதா? எதிர்க்கட்சிகள்



அபிமன்யு

செம்மணிப் புதைகுழி விவகாரம் பூதாகரமான நிலையில் அது தொடர்பில் விசாரணைகளை முடுக்கிவிட வேண்டிய கட்டாயத்தில் அரசு இருந்தாலும் அதை தெற்கு மக்கள் எவ்வாறு எடுத்துக்கொள்ளப் போகின்றார்கள் என்ற அச்சம் அரசுக்கு இருக்கவே செய்கிறது.

ஏனெனில் செம்மணிப் புதைக்குழி விசாரணை முடிவுகள் நிச்சயம் இராணுவத்திற்கு எதிரானதாகவே இருக்கும் அப்போது அதை தெற்கு ஏற்றுக்கொள்ளுமா என்பது கேள்விக்குறியே.

தவிர, இவ்வாறான விடயங்களை எதிர்க்கட்சிகள் வேறு திசைக்குத் திருப்ப வாய்ப்புக்கள் அதிகம்.

எதிர்க்கட்சிகளுக்கு ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். அதற்கு சிங்கள மக்களின் ஆதரவு வேண்டும். அந்த ஆதரவைப் பெறுவதென்றால், அவர்களை ஏதோவொரு வகையில் குழப்ப வேண்டும். அரசு இராணுவத்திற்கு எதிராக செயற்பகிறது. இராணுவத்தைக் காட்டிக் கொடுக்க முற்படுகிறது.

இலங்கையை சர்வதேசத்தில் நிறுத்தமுற்படுகிறது போன்ற சொற்பதங்கள் நிச்சயம் சிங்கள மக்களை உசுப்பேற்றவே செய்யும்.

வடக்கு கிழக்கில் கால்பதிக்க சிங்கள மக்கள் கனவு கண்டுகொண்டிருந்ததை நனவாக்கியவர் மகிந்த ராஜபக்ஷ.

ஆம், பயங்கரவாதத்தை அழித்து எம்மை சுதந்திரமாக வடக்குக் கிழக்கிற்கு சென்று வர வழிவகுத்தவர் மகிந்த ராஜபக்ஷ.

அவரே எங்கள் நாயகன் என்று மகிந்த ராஜபக்ஷவைப் போற்றிப் புகழ்ந்த சிங்கள மக்களே அவரைத் தூக்கி எறியத் தலைப்பட்டது எதனால் என்றால்,

நாட்டின் வளங்களை ராஜபக்ஷக்கள் கொள்ளை அடித்தனர் என்ற உண்மையை சிங்கள மக்கள் புரிந்து கொண்டதனாலேயே.

இந்தக் கோபம் ராஜபக்ஷக்களை சிங்கள மக்கள் வீட்டிற்கு விரட்டியடிக்க வேண்டும் என்ற உறுதிமொழி எடுக்கும் நிலை ஏற்பட்டது.

இந்த உறுதிமொழியின் வெளிப்பாடே, அநுரகுமார திஸாநாயக்காவின் மாபெரும் எழுச்சி எனலாம்.

ஆம், இலங்கை வரலாற்றில் ஜே.வி.பி என்ற அமைப்பு ஆயுதப் போராட்டத்தால் மிகப்பலம் வாய்ந்த அமைப்பாக இருந்ததை எவரும்மறுத்து விட முடியாது. குறித்த அமைப்பை வளரவிட்டால் அது தமது அரசியல் எதிர்காலத்தைப் பாதிக்கும் என நினைத்த சிங்கள ஆட்சியாளர்கள் ஜே.வி.பியினரைத் தேடித் தேடி அழித்தனர்.

இதில் பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள், யுவதிகள்படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அந்த அமைப்பின் வழிவந்தவர் அநுரகுமார திஸாநாயக்க. நாட்டில் ஊழல் அற்ற ஆட்சி நடைபெறும் என மக்கள் மத்தியில் நம்பிக்கையை விதைத்ததன் விளைவே அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாட்சியைக் கைப்பற்றியது.

சொன்னதைச் செய்வது போல அநுர அரசு ஊழல் வாதிகளை தொடர்ந்து சட்டத்தின் முன் நிறுத்தி வருகின்றது.

ஊழல் வாதிகள் மீதான சட்ட நடவடிக்கை எதிரணியினரை மிரள வைத்துள்ளது என்பது நூற்றுக்கு நூறு விகிதம் உண்மையானது.

இந்த அரசை நிலைக்கவிடக் கூடாது எனவும் தொடர்ந்தால் அது தமது அரசியல் வாழ்க்கையைப் பாதிக்கும் எனவும் அச்சம் கொண்டுள்ளனர் எதிரணியினர்.

அதன் விளைவு, அநுர அரசை விமர்சிக்கும் செயலைத் தொடங்கியுள்ளனர். அந்த விமர்சனம் இனவாதத்தை தூண்டும் வகையில் இருப்பதுதான் இங்கு கவனிக்க வேண்டியது.

அதாவது, அநுர அரசை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்றால், சிங்கள மக்களுக்கு எதிராக செயற்படுகிறது அநுர அரசு என்ற தோரணையை தெற்கில் ஏற்படுத்த வேண்டும். அதற்கு அவர்கள் கையில் எடுத்த விடயமே தற்போது பேசுபொருளாகியுள்ள செம்மணிப் புதைகுழி விவகாரம்.

செம்மணிப் புதைகுழி அகழ்வுப் பணிக்கு அரசு அனுமதியளித்திருப்பதை திசை திருப்பும் செயலை கையில் எடுத்த எதிர்க்கட்சியினர், இராணுவத்திற்கு எதிராக அநுர அரசு செயற்படுகிறது என தெற்கில் நெருப்பை மூட்டும் வகையில் பேசிவருகின்றனர்.

> “இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையிலேயே அநுர அரசு தற்போது இருக்கிறது

ஈழத்தில் தமிழினத்துக்கு நடந்த அநீதி மிகப்பெரியது. சொல்ல வார்த்தைகள் அற்ற பல கொடுமைகளையும் வலிகளையும் அனுபவித்துவிட்டது தமிழினம்.

அதற்கான நீதியைப் பெற்றுத் தர சர்வதேசம் முனைப்புக் காட்டும் நேரத்தில் அநுர அரசை வீழ்த்தி மீண்டும் இனவாத செயல்களில் ஈடுபட முற்படுகின்றனரோ என்ற எண்ணம் மேலெழுந்துள்ளது.

இதைப் பறைசாற்றும் விதமாய் கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய உரை அமைந்துள்ளது.

அவரின் உரையில், “வவுனியாவில் அண்மையில் மீட்கப்பட்ட கைக்குண்டுகள் கொழும்புக்கு கொண்டுவரப்பட இருந்தன, பாதாளக் குழுக்களைப் பயன்படுத்தி சூழ்ச்சியின் மூலம் அரசை வீழ்த்த நினைக்கின்றார்கள் எதிர்க்கட்சியினர்.

சூழ்ச்சி செய்வதை நிறுத்திவிட்டு கிராமங்களுக்குச் சென்று அரசியல் செய்யுங்கள். மக்களைத் தெளிவுபடுத்துங்கள், ஒன்று திரட்டுங்கள். அதற்குரிய முழுச் சுதந்திரமும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. இதை எவரும் தடுக்க முடியாது.

ஆனால், சூழ்ச்சி செய்ய முற்பட்டாலோ, தங்களுக்கு எதிராக சட்டம் செயற்படத் தயாராகும் போது நாட்டில் அராஜக நிலையைத் தோற்றுவிக்க முற்பட்டாலோ அதற்கு இடமளிக்கப்படாது.

தோல்விகண்ட அணிகள் பாதாளக் குழுக்களைப் பயன்படுத்தி தமது திருட்டை மறைப்பதற்காக சூழ்ச்சி செய்து நாட்டைப் பணயம் வைக்க முற்படுவதை ஏற்க முடியாது” என்று கூறியிருக்கிறார்.

அநுர அரசை வீழ்த்துவதற்கு இனவாதத்தை தூண்டி தமிழ் – சிங்கள மக்கள் மத்தியில் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் எதிரணியினர் நடந்து கொண்டால் அது மீண்டும் இந்த நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும். அந்தக் குழப்பம் மீண்டும் முதலில் இருந்து தொடங்குவதாய் அமைந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராகவும் பின்னர் வடக்கு மாகாண ஆளுநரின் உதவிச் செயலாளராகவும் இருந்து ஓய்வு பெற்ற ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அவர்கள் காலமாகிவிட்டார். என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.



ஜே.எக்ஸ்.செல்வநாயகம்

சிறந்த நிர்வாகியான அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது.

அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

10 ஆம் திருவிழாவுக்குப் பின்னர் அதிகளவான அடியார்கள் நல்லூருக்கு வருவினம்.

ஆகையால பொலிஸார் கண்ணும் கருத்துமாக இருக்க வேணும். எனினும் அநேகமான பொலிஸார் கதிரைகளில குந்தியிருப்பது போலத் தெரியுது.

அதிலும் குறிப்பாக நல்லூர் சிவன் புதுவீதி இரு வழிப் போக்குவரத்தாக இருப்பதால, அந்த வீதியின் இரு வழியாலும் வாகனங்கள் வந்து போக்குவரத்துக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திறதாக இருக்குது.

அதோட அந்த இடத்தில பொலிஸார் சேவையில ஈடுபடாதத்தால சிவன்புதுவீதியில போக்குவரத்து நெருக்கடி மிக மோசமாக உள்ளது.


எனவே இது தொடர்பில யாழ். மாநகர சபை உரிய நடவடிக்கை எடுக்க வேணும்.

இவ்வாறு விதானையார் கூற, அதனை ஆமோதித்த சாத்திரியார் சதாசிவம்; விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இதைவிட சிவன்புதுவீதியின்ர இரு மருங்கிலும் மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ என்பன நிறுத்தப்படுவதால, சிவன் புதுவீதியின் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது.

அதோட எதை எடுத்தாலும் இங்க 50 ரூபா என்ற அறிவுப்புக்களின்ர ஒலிபெருக்கிச் சத்தங்களைக் கணிசமாகக் குறைக்கிறதோட, அடியார்கள் போய்வருவதற்கு வசதியாக வீதியில ஒழுங்குபடுத்தலை செய்வதும் கட்டாயமானது.

இவ்வாறு சாத்திரியார் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.



## சுப்பர் மாக்கெட் வருகையால் உள்ளூர் வர்த்தகர்கள் பாதிப்பு

**கங்காணி:-** பொருட்களின்ர விலைகள் தென் பகுதியில கணிசமாகக் குறைவடைந்த போதிலும் வட மாகாணத்தில உள்ள வர்த்தகர்கள் பொருட்களுக்கான விலையைக் குறைக்கவில்லை எண்டு சனங்கள் குறைசொல்லுகினம்.

ஆகையால எங்கட வர்த்தகர்கள் வியாபாரத்தில தர்மத்தைப் பின்பற்ற வேணும். இந்தாப் பாருங்க இப்ப தென் பகுதியில உள்ள சுப்பர் மார்க்கெற்றுக்கள் இங்க இயங்கத் தொடங்கியிற்று. எங்கட சனங்கள் இராப் பகலா சுப்பர் மாக்கெற்றுக்களில பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கினம்.

அதேநேரம் எங்கட உள்ளூர் வர்த்தகர்கள் இதால கடும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கினம்.

உண்மையில எங்கட உள்ளூர் வர்த்தகர்களைக் காப்பாற்றுவதற்கான ஏற்பாடுகளை எங்கட வர்த்தக அமைப்புகள் செய்திருக்க வேணும்.

அதைச் செய்யாததால, எங்கட உள்ளூர் வர்த்தகர்கள் தொழில் நட்டத்தை எதிர் நோக்கும் அபாயத்திற்கு ஆளாகியிருக்கினம்.

**மூப்பர்:-** அது சரி வடமாகாணத்தில உள்ள பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக விண்ணப்பம் கோரப்பட்டிருக்குது.

ஏற்கனவே இருந்த அதிபர்களுக்கு என்ன நடந்தது.

**வாத்தியார்:-** அதிபர் பதவிகளில இருந்தவர்கள் சிலர் ஓய்வு பெற்று விட்டினம். பலர் கல்வியியலாளர் பதவிக்கு போயிற்றினம்.

இப்ப அந்த இடங்களில அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டிருக்குது.

**விதானையார்:-** ஓ! கடமை நிறைவேற்று அதிபர்களாக இருந்தவர்களை நீக்கிப் போட்டுப் பிறகும் ஆசிரியர்களிட்டத் தானே பாடசாலைகளை ஒப்படைக்க வேண்டி இருக்குது.

**பண்டிதர்:-** ஏன் பாருங்க, இப்ப வடமாகாணத்தில கடமை நிறைவேற்றுப் பதவியாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருக்குது.

இப்படித்தான் முன்பும் இருந்த நிர்வாகம் கடமை நிறைவேற்று அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரி நியமனம் வழங்கியது.

அதிபர் பரீட்சை மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை என்பவற்றை மத்திய அரசு நடத்துவதால, அங்க ஏற்படுகிற இடைவெளி இஞ்ச உரிய பதவிக்கான ஆளணியில தட்டுப்பாட்டை ஏற்படுத்தும்.

இதன் காரணமாக கடமை நிறைவேற்றுப் பதவிகள் தவிர்க்க முடியாமல் போகிறது.

அந்தந்த நேரத்தில இருக்கிற சூழ்நிலைகளுக்கு ஏற்ப எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை பின்னர் வருகின்ற நிர்வாகங்கள் விமர்சிக்கக் கூடாது.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநுர அரசின் கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் வியாசரின் கருத்து என்ன?






எழுத்தாயுதம் துப்பாக்கி முனையிலும் கூரானது(வீரியமானது) இது தொடர்பில் உங்கள் கருத்து?

**மனிதன் சுயநலவாதி என்பதற்கு தகுந்த உதாரணம் ஒன்று வியாசரின் ஸ்ரைலில்?**

கிருஷ்- அல்லைப்பிட்டி

தேனியிருக்கிறதே. அது தனது தேவைக்காக பூக்களில் தேனை எடுத்து தனது வயிற்றில் இருக்கும் ஒருவித சுரப்பியை அந்தத்தேனுடன் கலந்து கூட்டில் சேகரித்து வைக்கிறது.

அந்தத் தேன் நூறு ஆண்டுகள் ஆனாலும் கெட்டுப் போகாது.

அப்படி தனது உணவுத் தேவைக்காகச் சேகரிக்கும் தேனை மனிதன் பறித்தெடுக்கிறான் என்றால் மனிதனை விட சுயநலவாதி இந்த உலகில் யாரும் இல்லை என்பதே பொருள்.

இந்த உலகம் தனக்கானது மட்டும் என நினைக்கும் மனிதனின் சுயநலம் உலகை அழிவின் விளிம்பிற்குக் கொண்டு வந்துவிட்டது.

**எழுத்தாயுதம் துப்பாக்கி முனையிலும் கூரானது(வீரியமானது) இது தொடர்பில் உங்கள் கருத்து?**

தர்மா- யாழ்.பல்கலை

அது ஒரு காலம். என்றைக்கு சமூக ஊடகங்களின் ஆக்கிரமிப்பு ஆரம்பமானதோ அன்றே ஊடக தர்மம் கேள்விக் குறியாகி விட்டது.

இப்போது எந்த நிகழ்வென்றாலும் " நாங்கள் மீடியா'' என்று கொண்டு போனையும் தூக்கிப்பிடித்தபடி நான்கு பேர் நிற்கவே செய்கின்றார்கள்.

கேட்டால் "யூற்ரியூப்பராம்''.

**பூமாதேவியும் சீற்றம் கொண்டு பொங்கி எழத் தொடங்கிவிட்டாளே வியாசரே?**

மகாலட்சுமி- கொக்குவில்

மனிதனின் அட்டூழியம் அதிகரித்துவிட்டது.

இயற்கை சீராக இருந்தால் இந்த உலகம் சீரும் சிறப்புமாய் இருக்கும்.

இயற்கையை அழித்து அதில் வரும் ஆதாயத்தை அபிவிருத்தி என்பது எவ்வளவு முட்டாள் தனம்.

மண்ணைத் தோண்டி நிலக்கரி என்றும் எரிபொருள் என்றும் தங்கம் என்றும் பூமியை அழிக்கிறான்.

மரங்களைத் தறித்து தனது சுயநலனுக்குப் பயன்படுத்தி சூழலை மாசுபடுத்துகிறான்.

வாகனங்களை உற்பத்தி செய்து புகையைக்கக்கி காற்றை மாசுபடுத்துகிறான்.

அணுக்களைத் திணித்து அணுகுண்டைத் தயாரித்து உலகையே அழிக்கும் நிலைக்கு வந்துவிட்டான்.

இவை அனைத்துக்கும் இயற்கை சர்வ சாதாரணமாக பதில் சொல்லிவிடும்.

**அன்பில் பொய்-மெய் என்று இரண்டு உண்டா வியாசரே?**

ரதீஸ்- வதிரி

தாய்ப்பால் எவ்வளவு பரிசுத்தமானதோ அவ்வளவிற்கு அன்பும் பரிசுத்தமானது.

அன்பு என்றாலே அது உண்மை நிறைந்தது. அந்த உண்மைக்குள் ஒரு துளியேனும் பொய் கலந்திராது.

அன்பு போன்று நடிப்பவர்கள் பலர் இருப்பதனாலேயே அன்பில் உண்மை- பொய்மை என இருவகை இருப்பதாய் கருத வேண்டி உள்ளதே தவிர அன்பு எனின் அது பரிசுத்தமானது.அந்தப் பரிசுத்தம் தாய்ப்பாலின் பரிசுத்தத்திற்கு ஈடானது அவ்வளவு தான்.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்

**போரைநடத்தியதென்பகுதியினரிடம்போர்க்குணம் மாறாத வரையில் வட பகுதி மக்களின் வாழ்வு நிலை மாறாதல்லவா?**

சுதன்-குப்பிழான்

அடிமைச்சந்தைகளில் விற்கப்பட்ட கறுப்பினத்தவர்களின் வழி வந்தவர்கள் இன்று அமெரிக்காவை ஆட்சி செய்யும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

இது கறுப்பினத்தவர்களின் உச்ச வளர்ச்சி என்றாலும் அமெரிக்கர்களின் மனமாற்றம் என்பதும் முக்கியமானது.முதலில் தமிழினத்தை சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் பார்வையை பெரும் பான்மையினர் கைவிட வேண்டும்.தமிழினம் ஏன் ஆயுத வழியைத் தெரிவு செய்தது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்போது தான் இந்த நாட்டில் சமாதானப் பூமலரும்.இல்லையேல் அது வெறும் கானல் நீராகவே இருக்கும்.

**வியாசரே வீடுகளுக்கு முன்னால் கடை கட்டும் கலாசாரம் மீண்டும் தொடங்கிவிட்டது போல இருக்கிறதே?**

நரேன்- பருத்தித்துறை

இப்போது யாழ்ப்பாணத்தாருக்கு புதிய நோய் தொற்றியிருக்கிறது.

அதாவது வீதி முகப்பில் கடைத் தொடர் கட்டுவது, யூஸ் கடை போடுவது, சாப்பாட்டுக் கடை நடத்துவது. இது தான் இப்போதைய நிலைப்பாடு.

இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்னர் திருமண மண்டபம் கட்டும் வருத்தத்தில் இருந்தார்கள்.

அதனால் ஒழுங்கைக்கொரு திருமண மண்டபங்கள் என்ற நிலை வந்துவிட, இப்போது புது றூட்டில் செல்கிறார்கள்.

எல்லாம் வெளிநாட்டுக் காசு செய்யும் கோதாரிதான்.

முதலில் அதை நிறுத்தினால் எல்லாம் சரிவரும்.

**மாகாணசபைத் தேர்தல் நியாயமாக நடத்தப்பட வேண்டியதல்லவா வியாசரே?**

தர்மபாலன்-முகமாலை

சிறு உதாரணத்திற்காக பிரதேச சபைகளை எடுத்துக் கொள்வோம்.அதில் தவிசாளர்களின் தலைமையில் பிரதேச அபிவிருத்திப் பணிகள் நடைபெறும்.

அங்கு பிரதேச சபை செயலாளர்கள் முதன்நிலை பெறாமலிருப்பார்.

சபை ஆட்சிக்காலம் முடிந்ததும் உடனடியாக தேர்தலை நடத்தாது போக, மீண்டும் செயலாளர்கள் முன்னிலை பெறுவர்.

அதன் பின் தேர்தல் நடத்தப்பட மறுபடியும் தவிசாளர்கள் முன்னிலையாவர்.

இது பிரதேச அபிவிருத்தியை நோக்கிய பயணமாக அல்லாமல், செயலாளர்ஸ்ரீ- தவிசாளர்க்குள்ளான முரண்பாட்டை நோக்கிய பயணமாகவே இருக்கும்.

**அநுர அரசின் கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் வியாசரின் கருத்து என்ன?**

சிவலிங்கம்- மானிப்பாய்

கல்விச் சீர்திருத்தம் என்பது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமானது.

இது AI யுகம். இந்த யுகத்திற்கு ஏற்றாற் போல் கல்வி இருக்க வேண்டுமே தவிர அது கற்கால முறைமையில் இருப்பது பொருத்தமற்றது.கல்விச் சீர்திருத்தத்தில் மிக முக்கியமான விடயம் ஒன்றை அரசு கவனிக்க வேண்டும். தங்களை கல்வியியலாளர்கள் என்று கூறும் பலர் இந்தக் கல்விச் சீர்திருத்தத்துக்குள் மூக்கை நுழைக்கப் பார்க்கிறார்கள்.

அவர்களின் மூக்கை அறுக்க வேண்டும். இல்லையேல் கல்வி கந்தறுந்து போவது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனவரின் கண்ணீர்



காணாமல் போனவரின் கதறல் மொழிகளை
ஊரூராய்த் தேடும் உறவுகளின் கண்ணீரால்
உருக்கமாய் வரையும்
ஊமைக் காகிதத்தை உலகமே புரிந்துகொள்!
போர் நடந்த பூமியில்
பொது மனிதராய் வாழ்ந்திருந்தோம்
யாகம் ஏதும் செய்யவில்லை
யாரோ எம்மை கடத்தினர்
ஊரில் யாருக்கும் உறக்கமில்லை
உண்மையில் அவர்களும் எதிரியில்லை
ஏனோ எம்மை வீழ்த்திட எவனோ
ஆசை கொள்கிறான் சதியேதும்
அறியாத சிறுபிள்ளையும் - தன்னுடன்
சண்டையிடுவதாய் நினைக்கிறான்
தேனாய் எதுவும் கேட்கவில்லை - அவன்
தேடலும் எதுவெனப் புரியவில்லை
வீணாய் எமை வீழ்த்திட அவன்
வெறியோடு வருவதே புரிகிறது
விதியை நொந்து புலம்பி - நாங்கள்
உயிரை விடுகிறோம் அடங்கி

உற்றார் உறவினர் உருக்கமாய்
உயிரற்ற எமக்காய் காத்திருக்கின்றனர்
கடத்தல் தானே என்று
கடைசிப் பிள்ளையும் நம்புகிறது
கண்ணை மூடி விட்டோமென - எங்கள்
கனத்த நெஞ்சு விம்முகிறது
பிணத்தை தன்னும் கிடைக்காமல்
புதைத் தழித்த பேய்களை
வருத்திக் கொன்று ஒழித்திட
வையகத்தில் நீதி கிடைத்திடுமோ...?

கு.விஜயலதா, ஆசிரியர்.

# வலம்புரியிருந்தால் தூய்



படம்பார் பாடம் படி, பட்டை
தீட்டினால் தான் வைரம் ஜொலிக்கும்!
வலம்புரியிருந்தால் தான் சங்கிற்கு பெருமை!
இடம் வலம் பார்த்துத்தான் பேச வேண்டும்!

தூக்கிய பாதம் ஆடித்தான் முடிக்க வேண்டும்
துயர்கள் வந்தால் தான் நீதி நிலைக்கும்
பாடிய பாட்டுக்கு பொருள் கண்டு உரை!
பாடாமல் விட்டது தொடரும் கதை

கவிதைக்கு வசனம் மட்டுமல்ல, வாசனையும் - உண்டு!
வாடா மல்லிகைக்கே வரலாறு உண்டு!

பேர் ஊர் தெரியாதவனல்ல, பெருமை
பற்றிப் பேசவும் இல்லை, அருமை
தெரியாமல் அழிந்து கொண்டு இருக்கும்
வரலாற்றை ஆவணப்படுத்தினேன்!

இராம ஜெயபாலன்



# கவிதைத் தடாகம்




## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191. பிறவுண் வீதி. யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


# இளைஞர்களும் இன ஒற்றுமையும்!



இயற்கை தந்த மொழிகள் நூறு அதில்
இனிமை அன்றி வேறு ஏது!
“அ”வும் “உ”வும் எமக்கினிது - அதுபோல்
“ஏ” யும் “சி” யும் அவர்க்கினிது
மெஞ்ஞான அருளால் பிறந்தோம் - இன்று
விஞ்ஞானப் பொருளால் அழிந்தோம்
போர் செய்தே கடவுளர் வாழ்ந்தனர் - என்று
போதித்த பாடத்தை நிறுத்திடா வரையில்
யார் இங்கே மிஞ்சுவரோ
யாமறியேன் பராபரமே!

பெருமை தேடும் பெருமுதலைகளால்
பகைமை கூடிப் பாரழிகிறதே
பொறுமை யான புத்தியி னாலே - இந்தப்
பூமி யாளப் புறப்படு வோமே
ஊர்கூடி ஓர் - தேர் இழுப்பின் - அதுவே
உறவாடல் முறையென்று
உருக்கமாய்ச் சொல்வோம்
அதிகார வெறியில் அலைவோரைக் கண்டால்
அநீதி ஆசை தீதென் றுரைப்போம்
அறம்தனைக் காக்கும் அன்பரின் கூட்டை
அகன்றிடச் செய்தே அன்பினை வளர்ப்போம்
இணங்கி ஆளும் இனமாய் வாழ
இறைவன் ஆசி அருளைத் தேடி
இளைஞர் நாமே எழுவோம் எழுவோம்
இனிய உலகில் உயிர்கள் வாழ
உரிமைக் குரலைத் தருவோம் தருவோம்
“நன்றே செய்து நாட்டைக் காப்போம்”
என்றே சபதம் இன்றே செய்வோம்

வீ.வினோதராஜ்,
சாந்தையூர் வினிஸ்,
பண்டத்தரிப்பு.

# செம்மணி முதல் சித்துப் பாத்தி வரை



அரியாலையூரவர் இறுதிக் கிரிகை நடக்கும்
சித்துப்பாத்தி தன்னில் புதைகுழி கண்டு
சித்தம் கலங்கி நிற்குது இங்கு
ஆறுதல் சொல்ல முடியவில்லை ஏனோ!

திறந்தவெளி சிறையில் வாழ்ந்தோம் நாமே
சிறைப்பிடித்து கொன்று புதைத்தனர் அவரே!
பிஞ்சுகளையும் விட்டு வைக்கவில்லை பிசாசுகள்
பிணமாக்கி புதைத்து மகிழ்ந்தனர் வெறியர்கள்

கணவன் மனைவியை ஒன்றாய்ப் பிடித்து
கற்பும் அழித்து அடித்துக் கொன்று
மண்ணில் புதைத்து இரசித்தனர்!
மனிதம் மரணித்துப் போனது அன்று

விளையாடச் சென்ற பிள்ளை வீடு திரும்புமென
வழிமேல் விழிவைத்துக் காத்திருந்த அன்னை
விடைகாண முடியாது போனதை அறிவாயோ?
விதைகள் எல்லாம் வேர்விடமுன் அழித்தாயோ?

அரியாலையூர்
யசிதீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதை

## இலங்கையின் பொதுக்கடன் மறுசீரமைப்பு: சிக்கலான செயல்முறையிலிருந்தான படிப்பினைகள்

இலங்கையின் மீட்சிக்கான பாதை: கடன் மற்றும் ஆளுகை எனும் தொனிப்பொருளில் கடந்த ஜூன் மாதத்தில் இலங்கை மத்திய வங்கி, நிதியமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் இணைந்து முக்கியமானதொரு மாநாட்டினை நடாத்தியிருந்தன. இதில் பல முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டிருந்தன. அந்த விடயங்களில் மிக முக்கியமாகப் பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்களை தொகுத்து வழங்கும் நோக்கில் இந்தக் கட்டுரைத் தொகுதி தயாரிக்கப்படுகின்றது. அந்த வகையில் இக்கட்டுரையானது இத்தொடரில் அமைந்த மூன்றாவது கட்டுரையாக அமைவதுடன் *"இலங்கையின் பொதுக் கடன் மறுசீரமைப்பு: சிக்கலான செயல்முறையிலிருந்தான படிப்பினைகள்"* என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் முக்கிய விடயங்களைத் தொகுத்து வழங்குகின்றது. இக்கடன் மறுசீரமைப்பானது பல சவால்கள் நிறைந்ததொன்றாக காணப்பட்டதுடன் இதனை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி பொதுமக்கள் அறிந்துகொள்வது முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பயணம், இதையொத்த இறை மற்றும் வெளிப்புற பாதிப்புகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு சிறந்த படிப்பினைகளை வழங்குகின்றது. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியினை கொண்ட ஆண்டாக 2022 காணப்படுகின்றது. நீண்டகால இறை ஏற்றத்தாழ்வுகள், தொடர்ச்சியான வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறைகள், கொள்கைத் தவறுகள் மற்றும் தாமதமான கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் என்பனவற்றின் ஒட்டுமொத்த தாக்கம் இலங்கையின் பாரிய பொருளாதார சரிவுக்கு வழிவகுத்தன. **ஆரம்பத்தில், இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு ஆழமான கடன் தீராற்றல் (solvency) பிரச்சினையாக இல்லாமல் திரவத்தன்மைப் (liquidity) பிரச்சினையாகத் தவறாகக் கண்டறியப்பட்டது.** இதனால் ஆட்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் இருபுடை கொடுகடன் வசதி மற்றும் நாணயப் பரஸ்பர பரிமாற்றல் போன்ற குறுகிய கால நிதியிடல் வசதிகள் மூலம் பொருளாதார மீட்சி அடையும்வரை காணப்படும் தற்காலிக நிதியிடல் நெருக்கடியினை தீர்க்க முடியுமென நம்பினார்கள். இதற்கு கொவிட்-19 காரணமாக ஏற்படும் பொருளாதார நெருக்கடியானது குறுகிய காலமே நீடிக்கும் என்றும், கொவிட்டுக்கு பின்னரான சுற்றுலா மற்றும் தொழிலாளர் பண அனுப்பல்கள் அந்நியச் செலாவணி உட்பாய்ச்சலை உருவாக்கும் என்றும் அதன் மூலம் நிதியிடல் நெருக்கடிகள் குறைவடையுமென கொள்கை வகுப்பாளர்களிடையே நிலவிய எதிர்பார்க்கைகளே முக்கிய காரணமாக அமைந்தன. இவ் எதிர்பார்ப்பானது வரிச் சீர்திருத்தம், செலவை பிரதிபலிக்கக் கூடிய எரிசக்தி விலை நிர்ணயம் மற்றும் நாணய நிதியிடலை நிறுத்துதல் போன்ற முக்கியமான ஆனாலும் அரசியல் ரீதியாக சவால்மிக்கதுமான சீர்திருத்தங்களை செயற்படுத்துவதை தாமதப்படுத்தியது.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், நாட்டின் பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு ஒதுக்குகள் பெரும்பாலும் தீர்ந்துவிட்டதுடன் நாட்டிற்கான கடனின் தொடர்ச்சியா தரமிறக்கலைத் தொடர்ந்து இலங்கை சர்வதேச மூலதனச் சந்தையின் அணுகலை இழந்தமையினால் அதிகாரிகள் நெருக்கடியின் ஆழத்தை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. இந் நெருக்கடியானது தாமதமான சீர்திருத்தங்கள் மற்றும் ஆழமாக வேரூன்றிய அமைப்பியல் சார்ந்த பிரச்சினைகள் என்பவற்றின் தாக்கத்தினை எடுத்துக் காட்டுகின்றது. இந்நெருக்கடிக்குப் பின்னர், அரசாங்கம் இப் பிரச்சினையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியினை நாடியது. அது இலங்கையின் பொருளாதார மற்றும் இறை நிலைமைகளை மதிப்பிட்டு, நாட்டின் பொதுக் கடன் நிலைபேறான (sustainable) மட்டத்தில் காணப்படவில்லை என அறிவித்தது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஆதரவைப் பெறுவதற்கு நாட்டின் பொதுக் கடன் நிலைபேறானதாக காணப்பட வேண்டுமென்பதால், அரசாங்கம் பாரிய இறை சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், பொருளாதாரத்தை நிலையான பாதையில் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான படுகடன் மறுசீரமைப்புத் திட்டத்தினை மேற்கொள்ளவும் கட்டாயப்படுத்தப்பட்டது.

**இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் இரட்டை இலக்குகளாக நாட்டிற்கான பொதுக் கடன் நிலைபேறானதன்மையை (public debt sustainability) மீட்டெடுப்பது மற்றும் வெளி நாட்டு தாங்கியிருப்புக்களை (external buffers) மீண்டும் கட்டியெழுப்புவது என்பன காணப்படுகின்றது.**

இந்த இலக்குகளை அடைவதற்கு கடன் நிவாரணம், பாரிய பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் என்பன தேவைப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் சந்தை அணுகல் நாடுகளுக்கான நாட்டிற்கான இடர் மற்றும் கடன் நிலைபேறான தன்மைக் கட்டமைப்பு (MAC SRDSF) நாட்டின் கடன் சுமக்கும் திறன், வரலாற்று ரீதியான போக்குகள் மற்றும் பொருளாதார மதிப்பீடுகள் போன்ற குறிப்பிட்ட பண்புகளைக் கருத்தில் கொண்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையை வழிநடத்தியது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேறான தன்மைப் பகுப்பாய்வு (Debt Sustainabilty Analysis) இந்த செயல்பாட்டில் ஒரு முக்கிய கருவியாக இருந்தது. இது நீண்ட கால நிலைபேறானதன்மையை மீட்டெடுக்கத் தேவையான கடன் நிவாரணத்தின் அளவு மற்றும் அதன் கட்டமைப்பைத் தீர்மானிக்க உதவியது.

இலங்கையின் கடன் நிலைபேறான தன்மை பகுப்பாய்வின்படி, நாட்டில் கடன் நிலைபேறான தன்மையை மீட்டெடுப்பதற்காக பின்வரும் இலக்குகள் அடையப்பட வேண்டியதாயிருந்தன:

i. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநின்ற பொதுக்கடனை (outstanding public debt as % of GDP) 2032ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 95 சதவீதத்திற்கு கீழ் குறைத்தல்

ii. அரசாங்கத்தின் மொத்த நிதியியல் தேவைப்பாட்டை (gross financial needs) 2027 முதல் 2032 வரையிலான காலகட்டத்தில் சராசரியாக 13 சதவீதத்திற்கும் குறைவாகப் பராமரித்தல் மற்றும்

iii. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்கத்தின் வருடாந்த வெளிநாட்டு நாணய கடன் (foreign currency debt service payments as % of GDP) பணிக் கொடுப்பனவுகளை 2027-2032 காலகட்டத்தின் ஒவ்வோர் ஆண்டிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவீதத்திற்கும் குறைவாக பராமரித்தல்.

ஆரம்பத்தில், அரசாங்கம் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பினை மேற்கொள்வதில் மாத்திரமே கவனம் செலுத்தியது. எனினும், **வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உபாயம் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேறான தன்மை பகுப்பாய்வு இலக்குகளை அடைவதற்கு தேவையான நிவாரணத்தின் பெரும் பகுதியை வழங்கியபோதிலும் கடன் நிலை பேறானதன்மை பகுப்பாய்வின் சகல இலக்குகளையும் பூர்த்தி செய்ய இது போதுமானதாக காணப்படவில்லை.** இதனால் குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் மொத்த நிதியியல் தேவைப்பாட்டு இலக்குகளை அடைவதற்கு இலங்கையின் பொதுக்கடனில் பாரிய பங்கினை கொண்டிருந்த உள்நாட்டுக் கடனையும் இக்கடன் மறுசீரமைப்பில் உள்ளடக்குவதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. இருப்பினும், கடன் மறுசீரமைப்பு உபாயத்தில் உள்நாட்டுக் கடனை உள்ளடக்குவதில் குறிப்பிடத்தக்க அபாயங்கள் காணப்பட்டன. உள்நாட்டு வங்கித்துறை ஏற்கனவே அரசாங்கப் பிணையங்களில் அதிக அளவில் முதலீடு செய்திருந்ததால், மேலதிக கடன் சுமையினை தாங்கும் அளவுக்குப் போதுமான மூலதன தாங்கியிருப்புக்களை கொண்டிருக்கவில்லை.

மேலும், உள்நாட்டுக் கடனின் கணிசமான பகுதி ஊழியர் சேமலாப நிதியம் (EPF) போன்ற ஓய்வூதிய நிதியங்களால் பேணப்பட்டமையினால், இவற்றின் மீது பெயரளவிலான கடன் தள்ளுபடியினை (nominal haircut) மேற்கொள்வது பொது ஓய்வூதிய சேமிப்பைப் பாதித்து, நிதியியல் அமைப்பை சீர்குலைத்து, பரந்த சமூக அமைதியின்மையைத் தூண்டக்கூடும் என்ற கரிசனைகளைத் தோற்றுவித்தன. இந்தக் காரணிகளைக் கருத்தில் கொண்டு, **அரசாங்கம் பெயரளவிலான கடன் தள்ளுபடியினை விதிப்பதற்குப் பதிலாக, முதிர்வு கால நீடிப்புகள் (maturity extension) மற்றும் வட்டிவீதக் குறைப்புகளைச் செயல்படுத்துதல் போன்ற மிகவும் வினைதிறன் மிக்க அணுகுமுறையைக் கையாண்டது.** இந்த உபாயமானது நிதி ஸ்திரத் தன்மையைப் பாதுகாத்து முக்கிய சமூக நிறுவனங்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் காக்க உதவியது. இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறு சீரமைப்பு மிகவும் சிக்கலானதாக அமைந்ததற்கு பின்வருவன முக்கிய காரணங்களாக அமைந்தன:

i. கடன் மறுசீரமைப்புக்கான அபிவிருத்தியடைந்த 20 நாடுகளைக் கொண்ட குழு பொதுக் கட்டமைப்புக்கான (G20 common framework for debt treatment) அணுகல் இல்லாமை

ii. இருதரப்பு, பல்தரப்பு மற்றும் நாட்டிற்கான சர்வதேச முறிகளை (International Sovereign Bonds) வைத்திருக்கும் தனியார் கடன் வழங்குநர் உட்பட அதன் கடன் வழங்குநர்களின் பன்முகத் தன்மை

iii. மறுசீரமைப்புச் செயற்பாட்டின் போது நிதி மற்றும் சமூக ஸ்திரத் தன்மையைப் பேண வேண்டிய அவசியம்.

இவற்றுடன் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேறான தன்மை பகுப்பாய்வு வரம்புகளுக்கிசைவாக சமமான சுமைப் பகிர்வை உறுதி செய்வதற்கான அர்ப்பணிப்பும் முக்கியமானதாகக் காணப்பட்டது;

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம் பார்க்க)



நா.ஜனகன்
சிரேஷ்ட பொருளியலாளர்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : ரசிகன் ஒரு ரசிகை (1986)
பாடியவர் : கே.ஜே. யேசுதாஸ்
இசை : ரவீந்தரன்
இயற்றியவர் : வாலி



பாடி அழைத்தேன் உன்னை
இதோ தேடும் நெஞ்சம்

பாடி அழைத்தேன் உன்னை
இதோ தேடும் நெஞ்சம்

பாடி அழைத்தேன் உன்னை
இதோ தேடும் நெஞ்சம்

வாராய் என் தேவி
பாராய் என் நெஞ்சில்
மின்னல் கண்ணில் கங்கை

பாடி அழைத்தேன் உன்னை
இதோ தேடும் நெஞ்சம்

கோவிலில் தேவிக்கு பூசை
அதில் ஊமத்தம் பூவுக்கேன் ஆசை
தேவதை நீ என்று கண்டேன்
உந்தன் கோவிலில் நான் வந்து நின்றேன்

நான் செய்த பாவங்கள்
உன் நெஞ்சில் காயங்கள்
கண்ணீரில் ஆறதோ
கோபம் தீராதோ

பாடி அழைத்தேன் உன்னை
இதோ தேடும் நெஞ்சம்

நீ அந்த மாணிக்க வானம்
இந்த ஏழைக்கு நீ ரொம்ப தூரம்
உன்னிடம் நான் கொண்ட மோகம்
இந்த ஜென்மத்தில் தீராத பாவம்

மேடைக்கு ராஜா போல்
வேசங்கள் போட்டாலும்
ஏழைக்கு பல்லாக்கு
ஏறும் நாளேது

பாடி அழைத்தேன் உன்னை
இதோ தேடும் நெஞ்சம்

பாடி அழைத்தேன் உன்னை
இதோ தேடும் நெஞ்சம்

வாராய் என் தேவி
பாராய் என் நெஞ்சில்
மின்னல் கண்ணில் கங்கை

(9 ஆம் பக்க தொடர்ச்சி...)

இக்கடன் மறுசீரமைப்பானது பின்வரும் மூன்று முக்கிய குறிக்கோள்களை நோக்காக கொண்டமைந் திருந்தது:

1. பொருளாதார மீட்சியை ஆதரிப்பதற்கும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்குமான செயன்முறையை விரைவுபடுத்துதல்
2. அனைத்து கடன் உடன்படிக்கைகளையும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைபேறானதன்மை அளவுருக்களுடன் (parameters) ஒருங்கிணைத்தல்
3. அனைத்து கடன் வழங்குநர் (creditor) குழுக்களிலும் தீர்வின் ஒப்பீட்டுத்தன்மையை (Comparability of Treatment) உறுதிப்படுத்தல்.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்காக, சர்வதேச நாணய நிதியத்தின் அளவுகோல்களுடன் நிலைத்திருப்பதை உறுதி செய்வதற்கும், தீர்வின் ஒப்பீட்டுத் தன்மையுடன் இணங்குவதை உறுதி செய்வதற்கும் பல சுற்று கடன் வழங்குநர் ஈடுபாடு மற்றும் முன்மொழி வுகளுக்கான திருத்தங்களை உள்ளடக்கிய ஒரு தொடர்ச்சியான மற்றும் வினைத்திறன்மிக்க அணுகுமுறையை இலங்கை பின்பற்றியது. மேலும், இக்கடன் மறுசீரமைப்பில் காணப்படும் சிக்கல்களை கருத்திற் கொண்டும் முன்னொருபோதும் இவ்வாறானதொரு அனுபவம் இலங்கைக்கு இல்லாததையும் கருதிற்கொண்டு அரசு அதனை வினைத்திறனாக நடைமுறைப்படுத்த சர்வதேச சட்ட மற்றும் நிதி ஆலோசகர்களை நியமித்தது. அனைத்து கடன் வழங்குநர்களும் முறையாக அடையாளம் காணப்பட்டதுடன் இச்செயன்முறையானது வெளிப்படையானதாகவும் கடன் வழங்குநர்களிடையே நியாயமான சுமைப்பகிர்வு இருக்கும் என்பதனையும் உறுதி செய்யுமுகமாக கடன் வழங்குநர்களுக்கு திறந்த முழுமையான தகவல் தொடர்பு வழங்கப்பட்டது. இச்செயன்முறையின் முக்கிய நோக்காக சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியினை பெறுவதற்கான முன்நிபந்தனையான உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து நிதி உத்தரவாதங்களைப் பெற்றுக் கொள்வது காணப்பட்டது. பொதுவாக இருதரப்பு கடன் வழங்குநர்களிடையேயான ஒருங்கிணைப்பு ஏற்படுத்துவது சிக்கலானதாக காணப்பட்டதுடன் 1956 இல் பாரிஸ் கிளப்பை நிறுவுவதற்கும் இது ஒரு முக்கிய காரணியாகவிருந்தது. 2020இற்குப் பின்னர், கொவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியில் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் அதிகரித்து வரும் கடன் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கும் விதமாக, அபிவிருத்தியடைந்த 20 நாடுகளைக் கொண்ட குழு மற்றும் பாரிஸ் கிளப் ஆகியவற்றால் கடன் மறுசீரமைப்புக்கான பொதுவான கட்டமைப்பு நிறுவப்பட்டது.

**ஒரு நடுத்தர வருமானம் கொண்ட நாடாக, குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்காக வடிவமைக்கப்பட்ட G20 பொதுவான கட்டமைப்பிற்கு இலங்கை தகுதியற்றதாகக் காணப்பட்டதனால், கடன் மறுசீரமைப்புச் செயன்முறையில் அதன் பல்வேறு உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களிடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்வது மிகவும் சவாலானதாக இருந்தது.**

அதன்படி, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பிரான்ஸ், ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் இணைந்து தலைமை தாங்கும் வகையில் இலங்கை தனது சொந்த உத்தியோகபூர்வ கடன் வழங்குவோர் குழுவை உருவாக்க வேண்டியிருந்தது. இக்குழுவில் சீனா உத்தியோகபூர்வமாக இணையாவிடினும் தனியான பேச்சுவார்த்தைகளில் அரசுடன் ஈடுபட்டு, இறுதியில் மற்ற அதிகாரவபூர்வ கடன் வழங்குநர்களால் முன்மொழியப்பட்ட கடன் மறுசீரமைப்பிற்கொத்த ஒரு கடன் மறுசீரமைப்பை முன்மொழிந்தது.

பாரிஸ் கிளப் மற்றும் பாரிஸ் கிளப் அல்லாத கடன் வழங்குநர்களுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடாத்தி மற்றும் அதனது அனைத்து இராஜதந்திர மற்றும் நிறுவனத் தொடர்புகளைப் பயன்படுத்தி இலங்கை வெளிப் படைத்தன்மை, தீர்வின் ஒப்பீட்டுத்தன்மை மற்றும் நியாயமான சுமை பகிர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு கடன் மறுசீரமைப்பை செயற்படுத்தியது. இச்செயன் முறையானது அதன் இருதரப்பு வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக நிறைவு செய்ய துணை புரிந்தது. இவ்வாறான சிக்கல்களின் காரணமாக கடன் மறுசீரமைப்புச் செயன்முறையை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக காலம் தேவைப்பட்டது.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களின் மற்றொரு முக்கிய பிரிவான நாட்டிற்கான சர்வதேச முறிகளை வைத்திருப்பவர்கள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டவர்களாகவும் கடன் மறுசீரமைப்பைத் தொடர்ந்து தங்களது கடனை அதிகம் மீட்டெடுப்பதில் கவனம் செலுத்துபவர்களாகவும் காணப்பட்டனர். ஆரம்பத்தில், அரசு வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்காக ஒரு நேரடியான கடன் கருவியை பயன்படுத்துவதற்கே முனைந்தது. எனினும், பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்ட போது, சர்வதேச முறிகளை வைத்திருப்பவர்கள் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார அனுமானங்கள், குறிப்பாக பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் செலாவணி வீத எதிர்வுகூறல்கள் குறித்து தமது கரிசனைகளை வெளிப்படுத்தியதுடன் கடன் நிவாரணத்தை பொருளாதார செயற்திறனுடன் இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட கருவிகளை பயன்படுத்துமாறு முன்மொழிந்தனர். இதற்கு பதிலளிக்கும் விதமாக, இலங்கை பேரண்டப் பொருளாதார குறிகாட்டிகளுடன் இணைக்கப்பட்ட (macro linked bonds) முறிகளை அறிமுகப்படுத்தியது. இது பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விளைவுகளின் அடிப்படையில் கடன் திருப்பிச் செலுத்துதல்களை தீர்மானிக்கின்றது. நாட்டின் பொருளாதாரம் சர்வதேச நாணய நிதியத்தின் அடிப்படை (baseline) எறிவுகளை' விட சிறப்பாக செயற்பட்டால் கடன் வழங்குபவர்களுக்கு அதிக கடன் மீள்செலுத்தலினை வழங்குவதுடன் குறைவாக செயற்பட்டால் இலங்கைக்கு அதிக கடன் நிவாரணத்தையும் வழங்கும் பொறிமுறையினை கொண்டிருந்தது. இவ் நெகிழ்வான செயன்முறை, எதிர்கால கடன் கொடுப்பனவுகள் குறித்த கவலைகளை நிவர்த்தி செய்யும் அதே வேளையில், கடன் வழங்குநர் குழுக்களிடையேயான நியாயமான அணுகுமுறையை உறுதி செய்தது. இதற்கு மேலதிகமாக, ஆளுகையுடன் இணைக்கப்பட்ட முறிகள் (governance linked bonds) அறிமுகப் படுத்தப்பட்டன. முன் வரையறுக்கப்பட்ட ஆளுகை தொடர்பான பிரமாணங்களைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அரசு பூர்த்தி செய்யுமெனின் இம்முறியானது வட்டிக் கொடுப்பனவுகளை குறைப்பதற்கு வழிசெய்து, கட்டமைப்புச் சீர்திருத்தங்களுக்கான நாட்டின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்றது.

**இந்த நடவடிக்கைகளுடன் அரசு டிசம்பர் 2024 இல் நாட்டிற்கான சர்வதேச முறிகளுக்கான மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடிவுறுத்தியது.** ஒரு சிறிய பகுதி நீங்கலாக டிசம்பர் 2024 இல் வெளிநாட்டுக் கடன் மறுசீர மைப்பு நிறைவடைந்ததைத் தொடர்ந்து, நாட்டிற்கான கொடு கடன் தரமிடல்கள் மேம்பட்டன, பண வீக்கம் மித மடைந்தன, வட்டி வீதங்கள் குறைவடைந்தன மற்றும் இலங்கையின் பொருளாதார தோற்றப்பாடு கணிசமாக மேம்பட்டது. இருப்பினும், இந்த முன்னேற்றத்தைத் தக்கவைத்துக்கொள்வதென்பது, கட்டமைப்புச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து செயற்படுத்தல் மற்றும் இறை ஒழுக்கத்தினை பேணுவதற்கான வலுவான அரசியல் அர்ப்பணிப்பு என்பனவற்றினை பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

இலங்கையின் இக்கடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது புத்தாக்கமானதாகவும் வெளிப்படைத் தன்மைவாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. நிறுவனரீதியிலான வரையறைகள் மற்றும் சிக்கலான பன்முகப்படுத்தப்பட்ட கடன் வழங்குநர்களின் குழுக்களுக்கு மத்தியில் இலங்கை புதிய கடன் கருவிகளை அறிமுகப்படுத்தியும் கடன் நிவாரணம், வட்டி வீதக் குறைப்புக்கள் மற்றும் முதிர்ச்சிகளின் நீடிப்புகள் போன்ற பாதுகாப்பான நிவாரண நடவடிக்கைகளை உள்ளடக்கிய கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக மேற்கொண்டது. எனவே, இலங்கையின் இவ் அனுபவமானது தற்போதுள்ள உலகளாவிய கட்டமைப்பின் கீழ் வராத கடன் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பிற நடுத்தர வருமான நாடுகளுக்கு ஒரு சிறந்த மாதிரியை வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவியைத் தடுக்கும் குணம் பேய்களுக்கே உண்டு!



"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம், உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடும்" என்கிறார் வள்ளுவர்.

அதாவது, கொடுப்பதைத் தடுப்பவன் அழிவதோடு, அவனுடைய சுற்றமும் அழியும் என்கிறார். உதவியைத் தடுக்கும் குணம் மனிதர்களுக்கு மட்டுமா? பேய்களுக்கே உண்டு என்கிறது ஒரு கதை.

ஒரு விவசாயி. வயலுக்குப் போகாமல் வீட்டில் உட்கார்ந்திருந்தான். மனைவி, இது உழவுக்காலம். உழுவதற்குப் போகாமல் இப்படி வெட்டியாக உட்கார்ந்திருக்கிறாயே...? ஏன்? என்று கேட்டாள். போன வெள்ளாமையப்போ, நம் கலப்பை உடைந்து போய் விட்டதே மறந்துவிட்டாயா?

அந்த வாய்க்காலுக்கு அந்தப் பக்கம் ஒரு வேம்பு நிற்கிறது எல்லோ. அதை வெட்டி ஒரு கலப்பை செய்தால் போச்சு என்றாள் மனைவி.

மனைவியின் யோசனை விவசாயிக்குச் சரியென்றுபட்டது. கோடாலியை எடுத்துக் கொண்டு மரத்தை நெருங்கினான். வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு மரத்தை வெட்ட கோடாலியை ஓங்கினான். ஏ... நிறுத்துப்பா! பதற்றமாக ஒலித்தது ஒரு குரல். அண்ணாந்து பார்த்தான் விவசாயி. மரத்திலிருந்து ஒரு பேய் இறங்கி வந்தது.

நடுங்கிப் போனான். பயத்தை வெளிக் காட்டிக்கொள்ளாமல், யார் நீ... இதை வெட்டுவதை ஏன் தடுக்கிறாய்? என்று கேட்டான்.

இருப்பா... இரு. நான் ரொம்ப வருடமாக இந்த மரத்தில்தான் குடியிருக்கிறேன். இது இல்லை என்றால், நான் எங்கே போவேன். சரி, நீ இந்த மரத்தை வெட்டி என்ன செய்யப் போகிறாய்? கலப்பை செய்யப் போகிறேன். அப்புறம்?

அப்புறம் என்ன... கலப்பையால் நிலத்தை உழுவேன். விதை போடுவேன். மூன்று மாதத்தில் எள் முளைத்துவிடும். அதை விற்று வருகின்ற காசில் என் குடும்பமே பசியாறும்.

அவ்வளவுதானே... மூன்று மாதத்திற்கு ஒரு தடவை இங்கே வா. உன் வயலில் எவ்வளவு எள் விளையுமோ அத்தனை மூட்டைகளை நான் தந்து விடுகிறேன். மரத்தை மட்டும் வெட்டாதே என்றது பேய். விவசாயியும் அதற்கு ஒப்புக்கொண்டான். விவசாயி வயல் பக்கம் போகாமலேயே பருவம்தோறும் எள்ளைக் கொடுத்து வந்தது பேய்.

ஒருநாள், அந்த மரத்துக்குப் புதிதாகக் குடி வந்தது ஒரு பேய். மரத்தடியில் பத்து எள் மூட்டைகள் இருப்பதை பார்த்தது. இது யாருக்கு? என்று கேட்டது. பேய் நடந்ததைச் சொன்னது. அடப்பாவி, மனிதன்தான் நமக்கு பயப்பட வேண்டும். நாம் மனிதனுக்கு பயப்படக்கூடாது.

அந்த விவசாயியைக் கதறவிடுகிறேன் பார் என்று புறப்பட்டுப் போனது பேய். விவசாயியின் வீட்டுக்குப் போன நேரத்தில், விவசாயி கையில் கொள்ளிக்கட்டையுடன் வெளியே வந்தான். அதைப்பார்த்து, இதை எதற்குத் தூக்கிக்கொண்டு வருகிறான்? என்று அரண்டு போனது. பேயைப் பார்த்துவிட்ட விவசாயி, பேயைப் பார்த்து பயப்படுவானா... என்ன வேணும்? என்று கேட்டான்.

ஒன்றுமில்லை. இப்பிடி எள்ளை மூட்டையாக கொடுப்பதற்கு பதிலாக எண்ணெயாகவே கொடுத்துவிடலாமே என்று தோணியது. அதுதான் உங்களிடம் கேட்க வந்தேன் என்றதாம் பேய்.

# ஆச்சி அறிவுரை



## நாய், பூனைக்குட்டிகளை வீதிகளில் விடுவது முறையோ?

### பேராண்டி...

போன கிழமை பள்ளிக்கூடத்தால வரேக்குள்ள றோட்டிலை அனாதரவா நிண்ட நாலு நாய்க்குட்டியை பிஸ்கட் பெட்டிக்குள்ள கொண்டுவந்து, அதுக்கு குளிக்க வாத்து, மருந்து வைச்சு வவுனியாவிலை இருக்கிற நாய்க் காப்பகத்திலை கொப்பாவோட கொண்டுபோய் விட்டுட்டு வந்தனி எண்டு கொம்மா சொன்னவள்.

அவள் சொல்லச் சொல்ல எனக்கு கொப்பாவின்ர சின்ன வயசு ஞாபகந்தான் வந்துது பேராண்டி.

கொப்பனுக்கு உந்த நாய், பூனையிலை வலு அனுதாபம். ஒருக்கா றோட்டிலை யாரோ விட்டுட்டுப் போன பூனையைக் கொண்டு வந்திட்டான்.

தாத்தா ஒரே பேச்சு. ஆனாலும் வீட்டிலை எலித் தொல்லை, அதாலை பூனை வேணும் எண்டு என்னைத் தாத்தாட்டை சொல்லிச் சொல்லி ஆய்க்கினைப் பண்ணி ஒருமாதிரி சாதிச்சுப் போட்டான். வீட்டிலை வளக்கிற செல்லப் பிராணிகள் குட்டியீண்டால், அதுகளை றோட்டிலை, மீன் சந்தைகளிலை விட்டுவிடுற ஜென்மங்கள் இப்பவும் இருக்குதுகள் பேராண்டி.

நாய், பூனையை வளக்கேக்குள்ள அதுகளுக்கு முறையா கருத்தடை செய்து வளர்க்காமல் இப்படி குட்டிகளை வீதிகளிலை விடுறது மனச்சாட்சி இல்லாத செயல்.

நாய், பூனைகளிலை அக்கறையுள்ள பலரை எனக்குத் தெரியும் பேராண்டி.

நல்லூரடியிலை இருக்கிற ஒரு பிள்ளை வீட்டிலை சமைச்சு வீதியிலை அனாதரவா நிக்கிற நாய்களுக்கு சாப்பாடு வைக்கிறதை நான் கண்ணால பாத்திருக்கிறன்.

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தைப் பகுதியிலை ஒருத்தர் சைக்கிள்ல வந்து இறங்க, எத்தினை நாய்கள் ஓடிவந்து அவரோட செல்லம் பொழியுங்கள் தெரியுமோ பேராண்டி.

அவரும் கடை கடையாய் போய் மிஞ்சிற சாப்பாடுகளை வாங்கி வந்து வைப்பார்.

இதைவிட, தெல்லிப்பளைச் சந்தியிலை இருக்கிற ஒரு பேக்கரிக்கு முன்னாலை ஒருத்தர் தன்ர காசிலை பாண் வாங்கி நாய்களுக்கு வைப்பார்.

இரவு 8.30 மணிக்கு அந்த இடத்திலை அவரைக் காணலாம்.

இப்பிடி செல்லப்பிராணிகளில அன்பா இருக்கிற பலர் இருந்தாலும், வீதிகளிலை நாய், பூனைகளை எறிஞ்சு போட்டுப் போற ஜென்மங்களும் இருக்கவே செய்யினம்.

இப்ப இங்க காப்பகங்கள் பல வந்திருந்தாலும் அது தொடர்பிலை சரியான விழிப்புணர்வு இல்லாதது பெரும் குறை.

நாய், பூனைக் காப்பகங்கள் தங்களைப் பற்றியும் தங்கட சேவைகள் பற்றியும் ஊடகங்கள் மூலம் அறிவித்தால் அது மிகப்பெரிய காரியமா இருக்கும்.

ஏனெண்டால், அதுகளை வீதியிலை எறியிறவை காப்பகங்களிலை ஒப்படைக்கிற மனநிலைக்காவது வந்திடுவினமெல்லோ பேராண்டி.

**ஆச்சி வருவா...**

**மாவை.நா.கஜேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப பட்ஜெட் போடும்



# சூட்சுமம்!

செலவைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க குடும்ப பட்ஜெட் போடுவது அவசியம். இப்படி பட்ஜெட் போடும் போது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் இருப்பது கட்டாயம். அப்போதுதான் பட்ஜெட் சரியாகவும் முழுமையாகவும் இருக்கும்.

**01. பண வரவைக் கணக்கிடுதல்**

குடும்ப உறுப்பினர்களின் வருமானத்தை முதலில் பட்டியலிட வேண்டும். இந்தப் பட்டியலில் கைக்கு வரும் தொகையை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**02. நிதி இலக்குகளுக்கு பணம் ஒதுக்குதல்**

பிள்ளைகளின் உயர்கல்வி, வெளிநாட்டுச் சுற்றுலா, சொந்த வீடு, கார் மற்றும் ஓய்வுக்காலத்துக்கான முதலீட்டுக்குத் தேவையான தொகையை ஒதுக்கி வைத்துவிட வேண்டும்.

**03. கடன் தவணைகளுக்குத் தொகை ஒதுக்குதல்**

வீட்டுக் கடன், கார் கடன், தனிநபர் கடன் போன்றவற்றுக்கான தவணைத் தொகைக்கு பணம் ஒதுக்க வேண்டும். பிள்ளைகளின் ஆண்டு கல்விக் கட்டணம், இன்ஷூரன்ஸ் ஆண்டு பிரீமியம் போன்றவற்றுக்கான தொகையை குடும்ப பட்ஜெட்டில் ஒதுக்கி, அந்தத் தொகையை ஓராண்டுக்கான ஆர்.டி அல்லது லிக்விட் ஃபண்டில் முதலீடு செய்துவர வேண்டும்.

**04. செலவுகளுக்குத் தொகை ஒதுக்குதல்**

செல்போன் கட்டணம், மின்சாரக் கட்டணம், சினிமா, ஹோட்டலில் சாப்பிடுவது, மளிகை சாமான்களுக்கு என தனித்தனியாக தொகையை ஒதுக்க வேண்டும். கெட்டுப்போகாத மளிகை பொருட்களை மொத்தமாக வாங்கி வைத்துக்கொண்டால் பணம் மிச்சமாகும்.


**05. கணக்கு வழக்குகளைச் சரிசெய்தல்**

பட்ஜெட் போடும்போது, சில சமயங்களில் துண்டு விழும். அதனைக் கூடியவரை தேவையில்லாத செலவுகளைக் குறைத்து ஈடுகட்ட முயல வேண்டும். உதாரணத்திற்கு, சினிமா, ஹோட்டலில் சாப்பிடுவதைக் குறைத்துக் கொள்ளலாம். பற்றாக்குறையைச் சமாளிக்க முதலீட்டில் கை வைப்பதைத் தவிர்ப்பது நல்லது.

# அடுக்களைப் பக்கம்



- ஃப்ரிட்ஜில் சில நேரம் துர்நாற்றம் வரும் சில நேரம் அடுப்பங்கரையில் ஈக்கள் மொய்க்கும். இவற்றைத் தவிர்க்க ஒரு எலுமிச்சைப்பழத்தை இரண்டாக நறுக்கி ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு கிராம்பை குத்திவிடவும். ஒரு பகுதியை ஃப்ரிட்ஜில் வைத்தால் துர்நாற்றம் ஏற்படாது. மறு பகுதியை அடுப்பங்கரையில் வைத்தால் ஈக்கள் மொய்க்காது.
- எலுமிச்சைப்பழங்கள் அதிகமாக இருந்தால், ஒவ்வொரு பழத்தையும் தனித்தனியாக ரிசு பேப்பரால் சுற்றி எல்லாவற்றையும் சேர்த்து ஒரு காற்றுப்புகாத டப்பாவில் போட்டு ஃப்ரிட்ஜில் வைத்தால் எலுமிச்சைப்பழங்கள் நீண்டநாட்கள் கெடாமல் இருக்கும்.
- கத்திரிக்காயை நறுக்கியதும் கைகளில் ஏற்படும் கறையைப் போக்க உருளைக் கிழங்கை இரண்டாக வெட்டி கைகளில் தேய்த்தால் கறையும் மறையும் கைகளும் மிருதுவாகும்.
- ஒரு காற்றுப்புகாத டப்பாவில் ரிசு பேப்பரை வைத்து சிறிதளவு அரிசி போட்டு, அதன் மேலே வேறு ஒரு ரிசு பேப்பரைப் போட்டு பிஸ்கட்டுகளை அடுக்கிவைத்தால் பிஸ்கட்டுகள் நமக்காது.






# சமைப்போம் சுவைப்போம்

## உருளைக்கிழங்கு அவல்

**தேவையானவை :**

கெட்டி அவல் – 2 கப்
உருளைக்கிழங்கு – கால் கிலோ
மிளகுத்தூள் – அரை டீஸ்பூன்
மிளகாய்த்தூள் – கால் டீஸ்பூன்
வெங்காயம் – ஒன்று
கடுகு, கறிவேப்பிலை – சிறிதளவு
உப்பு – தேவையான அளவு
ரீஃபைண்ட் ஆயில் – தேவையான அளவு
செஷ்வான் சட்னி – ஒரு டேபிள் ஸ்பூன் (கடைகளில் கிடைக்கும்)



**செய்முறை**

உருளைக்கிழங்கைத் துருவி வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் சிறிதளவு தண்ணீர், உப்பு சேர்த்து அவலை இரண்டு மணி நேரம் ஊறவைக்கவும். வாணலியில் எண்ணெய் சேர்த்து கடுகு தாளித்து, நறுக்கிய வெங்காயம் மற்றும் துருவிய உருளைக்கிழங்கைச் சேர்த்து நன்கு வதக்கவும். பின்னர் ஊறவைத்த அவலைச் சேர்த்துக் கிளறவும். அதில் செஷ்வான் சட்னி சேர்த்து, மிளகுத்தூள், மிளகாய்த்தூள், தேவையான உப்பு சேர்த்து நன்கு கிளறி, மேலும் சிறிது எண்ணெய் ஊற்றிக் கிளறி, கறிவேப்பிலை சேர்த்து இறக்கவும். தேவைப்பட்டால் வேறு காய்கறிகள் சேர்த்துக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பல இலட்சம் பேரைக் கொன்றவர்..."

# ரஷ்ய ஜனாதிபதி புடினை எதிர்க்கும் "இரகசிய" மகள்?



உலகத் தலைவர்களின் அரசியல் நகர்வுகள் பற்றிய செய்திகள் ஒரு பக்கம் என்றால், அவர்களைப் பற்றிய அந்தரங்கச் செய்திகளும் அவ்வப்போது வெளியாகி அதிர்வலைகளைக் கிளப்பத்தான் செய்கின்றன. அப்படித்தான், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் "இரகசிய" மகளாக அறியப்படும் எலிசவெட்டா க்ரிவோனோகிக், டெலிகிராமில் வெளியிட்ட ஒரு பதிவு, உலக அரங்கில் இப்போது பேசுபொருளாகியிருக்கிறது!

**"இரகசிய" மகளும் மகன்களும்?**

ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு, லியுட்மிலா என்ற பெண்ணுடன் 1983ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. 2014இல் விவாகரத்து செய்துகொண்ட இவர்களுக்கு, இரண்டு மகள்கள் இருக்கின்றனர். இவர்களைத் தவிர புடினுக்கு இரகசியமாக இரண்டு மகன்களும், ஒரு மகளும் இருப்பதாகக் கடந்த காலங்களில் புலனாய்வு செய்து ரஷ்ய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன.

ரஷ்யாவைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனை அலினா கபேவாவுடன் புடின் நீண்டகாலம் இரகசியத் தொடர்பிலிருந்ததாகவும், அவர்களுக்கு இரண்டு மகன்கள் இருப்பதாகவும் பல்வேறு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருக்கின்றன. சுவிட்சர்லாந்தில் பிறந்த இந்த இரு மகன்களும், தற்போது ரஷ்யாவிலேயே இரகசியமாக வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அதேபோல "2003ஆம் ஆண்டு, ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் நகரில் பிறந்த எலிசவெட்டாவும், புடினின் மகள்தான்" எனச் செய்திகள் உலவிக் கொண்டிருக்கின்றன. 2020ஆம் ஆண்டு, `Proekt Media' என்ற ரஷ்ய ஊடகம் புலனாய்வு செய்து, முதன்முதலில் இந்தச் செய்தியை வெளியிட்டது. 2000களில், தனது வீட்டில் பணிப்பெண்ணாக வேலை பார்த்த ஸ்வெட்லானா என்ற பெண்ணுடன் புடின் இரகசிய உறவிலிருந்ததாகவும், அவர்களுக்குப் பிறந்த குழந்தைதான் எலிசவெட்டா என்றும் அந்த நிறுவனம் செய்தி வெளியிட்டது. எலிசவெட்டா, புடின் ஆகியோரிடையே இருக்கும் முக ஒற்றுமையை மேற்கோள் காட்டி இந்தச் செய்தியை வெளியிட்டது அந்த நிறுவனம்.

மேலும், 2003ஆம் ஆண்டு வரை, சாதாரணப் பணிப்பெண்ணாக இருந்த ஸ்வெட்லானா, அடுத்தடுத்த ஆண்டுகளில் பெரும் பணக்காரராக மாறினார். அவருக்கு ரஷ்யாவின் பிரதான தனியார் வங்கியான Rossiya வங்கியில் பங்குகள் இருக்கின்றன. ஸ்வெட்லானாவின் தற்போதைய சொத்து மதிப்பு 100 மில்லியன் அமெரிக்க டொலரைத் தொட்டிருக்கிறது" என்றும் Proekt Media செய்தி வெளியிட்டது. 2023ஆம் ஆண்டு, ஸ்வெட்லானாவின் ரஷ்ய அரசுத் தலைமையுடனான தொடர்புகளை மேற்கோள் காட்டி பிரிட்டன் அரசு, அவருக்கு எதிராகச் சில பொருளாதாரத் தடைகளை விதித்தது.

**தடைசெய்யப்பட்ட ஊடகம்... கொலை செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்?**

"இரகசிய மகள்" பற்றிய தகவல்களைப் புடின் தரப்பில் மறுக்கவில்லை என்றாலும், `Proekt Media' ஒரு அவதூறு பரப்பும் ஊடகம்" என்று, அடுத்த சில மாதங்களில் அந்த ஊடகம் தடை செய்யப்பட்டது. இதையடுத்து, புடின், எலிசவெட்டாவின் புகைப்படங்களை ஒன்று சேர்த்து, இருவருக்குமிடையேயான ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி சர்வதேச ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டன.

2021ஆம் ஆண்டு, ரஷ்யாவைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நாவல்னி, லூய்சா என்ற பெயரில் எலிசவெட்டா வைத்திருந்த இன்ஸ்டாகிராம் கணக்கை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தினார்.

அந்தக் கணக்கில் எலிசவெட்டா, பிரைவேட் ஜெட்களில் பறப்பதும், நைட் கிளப்புகளில் ஆட்டம்போடுவதுமான சொகுசு வாழ்க்கை குறித்த புகைப்படங்கள் ஏராளமாக இருந்தன. "எலிசவெட்டாவின் சொகுசு வாழ்க்கைக்குப் பின்னாலிருப்பது புடின் தான்" என்றார் நாவல்னி.

தொடர்ந்து பல்வேறு விவகாரங்களில் புடினுக்குக் குடைச்சல் கொடுத்த நாவல்னி கைதுசெய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டார். பிறகு, சிறையிலேயே உயிரிழந்தார். "பொய் வழக்குகளில் கைதுசெய்யப்பட்ட நாவல்னியை, சிறையில் வைத்துக் கொலைசெய்துவிட்டார் புடின்" என்ற விமர்சனங்கள் கிளம்பின.

**ஓவியரின் விமர்சனம்... தந்தைக்கு எதிர்ப்பு?**

2022ஆம் ஆண்டு, உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்புக்குப் பின்னர், இன்ஸ்டாகிராம் கணக்கை டெலிட் செய்துவிட்டு மாயமானார் எலிசவெட்டா. 2024இல், அவர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலுள்ள கலைக் கல்லூரி ஒன்றில் பட்டம் பெற்றதை, சர்வதேச ஊடகங்கள் கண்டுபிடித்தன.

"புடினின் இரகசிய மகள், போர்களால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த ஓவியங்களை வரைந்து விற்பனை செய்யும், பாரிஸிலுள்ள இரண்டு ஓவியக் காட்சிக்கூடங்களில் பணிபுரிந்து வருகிறார்" என்றும் செய்தி வெளியிட்டன.

ரஷ்யாவைச் சேர்ந்த ஓவியர் நஸ்தியா, "போர்க் குற்றம் புரிந்துகொண்டிருக்கும் ரஷ்யத் தலைமையுடன் பயாலாஜிக்கலாகவோ, வேறெந்த வகையிலோ தொடர்புடைய நபருக்கு, போரில் பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை வெளிப்படுத்தும் இந்த ஓவியக் காட்சிக்கூடங்களில் இடமளிக்கக் கூடாது" என்று சொல்லி, அந்த இரு ஓவியக் காட்சிக்கூடங்களுடனான தனது தொடர்பை முறித்துக்கொண்டார்.

எலிசவெட்டாவுக்கு ஆதரவாகப் பேசும் சிலர், "அவர் புடினைப்போல இருக்கிறார்... இன்னும் பல பேர்கூடப் புடினைப்போல இருக்கலாம். டி.என்.ஏ பரிசோதனை செய்யாமல் எப்படி முடிவுக்கு வருகிறார்கள்?" என்று கேள்வியெழுப்பினர். ஆனால் எலிசவெட்டாவோ, "நான் சொல்வதைக் காதில்கூட வாங்கிக்கொள்ளாத என் குடும்பத்தினரின் செயற்பாடுகளுக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?" என்றிருந்தார். இந்த பதில், "எலிசவெட்டா, புடினின் மகள்தான்" என்பதைக் கிட்டத்தட்ட உறுதி செய்தது.

தற்போது டெலிகிராம் செயலியிலுள்ள தனது சேனலில், "எனது வாழ்க்கையை அழித்த அந்த நபர், பல லட்சம் மக்களின் உயிரைப் பறித்துக் கொண்டிருக்கிறார்" என்று பதிவிட்டிருப்பதாக, ஜேர்மன் நாளிதழான `BILD' செய்தி வெளியிட்டிருக்கிறது.

எலிசவெட்டா, புடின் பெயரைக் குறிப் பிடவில்லை என்றாலும், "உக்ரைன் போரில் இலட்சக்கணக்கான மக்களின் உயிரைப் பறித்த புடினுக்கு எதிரான கண்டனப் பதிவுதான் இது" என்கிறார்கள் விவரமறிந்தவர்கள்.

உலகத் தலைவர்களின் கோரிக்கையை ஏற்று போரை நிறுத்தாத புடின், தன் இரகசிய மகளின் கண்டனப் பதிவுக்குப் பிறகாவது போரை நிறுத்துவாரா?!

# தெளிவே என் சிந்தனையுள்... 22

இளைஞன் ஒருவன் ஒரு சுவாமியிடம் சென்றான். சுவாமி என் வாழ்க்கை பிரச்சினை நிறைந்ததாக உள்ளது. அதனால் வாழ்வே வெறுத்து விட்டது. எனக்கு ஏதாவது தீர்வு சொல்லுங்கள் என்றான்.

சுவாமி சிரித்துவிட்டு "சரி, நீ இன்று இரவு ஆச்சிரமத்தின் மாட்டுத் தொழுவத்துக்குச் செல். இரவு அனைத்து மாடுகளும் தூங்கிய பின்னர் நீ தூங்கு, நாளை என்னைச் சந்தி" என்றார்.

இளைஞனும் மாட்டுத் தொழுவத்துக்குச் சென்றான். மறுநாள் கண்கள் சிவந்தபடி சுவாமியிடம் வந்தான்.

"சுவாமி இரவு தூக்கமே இல்லை. சில மாடுகள் படுத்தன. சில மாடுகளை சிரமப்பட்டு படுக்க வைத்தேன். சில மாடுகள் படுக்கவே இல்லை. அதிலும் கஸ்ரப்பட்டு சிலதைப் படுக்க வைத்தால் மற்றைய மாடுகள் எழுந்துவிடுகின்றன" என்றான்.

சுவாமி சிரித்துவிட்டுக் கூறினார். "மகனே! உனக்கு வரும் பிரச்சினைகளும் இதுபோலத்தான். ஒரு பிரச்சினை போனால் அதற்குப் பதில் புதிதாக பல பிரச்சினைகள் முளைத்துவிடும். உனக்கு வரும் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளப் பழகினால் அது தானாகத் தீர்ந்துவிடும்" என்றார்.

அந்த இளைஞனுக்கு தெளிவு கிடைத்தது. புன்னகையுடன் மகிழ்வாகச் சென்றான்.

**அன்பானவர்களே!**

எமக்கு பிரச்சினை வருகிறது என்று அதற்குப் பயந்து ஓரிடத்தில் முடங்குவோமாக இருந்தால், அது எம் வாழ்வை அழித்துவிடும்.

பிரச்சினையை இல்லாதொழிக்க அதற்கெதிராகப் போராட வேண்டும்.

எறும்பின் இருப்பிடத்தை மிதித்தால் அது கடிக்கும்.

தான் மனிதனின் கையில் நசிங்கி இறந்துவிடுவேன் என்று அது ஒருநாளும் ஒதுங்கிப் போவதில்லையே!




குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா



"கூலி", "மதராஸி" என அடுத்தடுத்து டாப் ஹீரோக்களின் படங்கள் ரிலீஸுக்கு வரிசைகட்டி நிற்பதால், இரவும் பகலுமாக ஸ்டூடியோவிலேயே வாசம் செய்து வருகிறார் அனிருத். இதற்கிடையே, ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் மியூசிக் கன்சர்ட் ஒன்றும் ஈ.சி. ஆரில் உள்ள கூவத்தூர் பகுதியில் நடத்துகிறார். அதற்கான வேலைகளிலும் அவர் கவனம் செலுத்தி வருகிறார் என்கிறார்கள்.



கதாநாயகனாக மட்டுமல்லாமல் முக்கியமான கதாபாத்திரங்களில் நடிக்கவும் முடிவெடுத்துவிட்டார் வடிவேலு. அது வெறும் காமெடி ரோலாக அமைந்துவிடாமல், கேரக்டர் தன்மையும் கொண்டதாக இருக்க வேண்டும் என்று மட்டும் கண்டிஷன் போட்டிருக்கிறார். "மாமன்னன்", "மாரீசன்" படங்களில் அவருடைய கரக்டர்களுக்குக் கிடைத்த வெற்றிதான் இந்த முடிவை எடுக்கத் தூண்டியிருப்பதாகச் சொல்கிறார்கள்.



"எங் மங் சங்", "மைக்கேல் முசாசி" உட்பட பிரபுதேவாவின் நான்கைந்து படங்கள் ரிலீஸுக்காகக் காத்திருக்கின்றன. அவற்றை வெளியிடும் பொருட்டு தயாரிப்பாளர்களிடம் பிரபுதேவா பேசியிருக்கிறார் என்கிறார்கள். இதையடுத்து, நிலுவையில் இருக்கும் படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவரும் என்று சொல்லப்படுகிறது.



"இந்தியன் 3" இல் இன்னும் படமாக்கப்படாமல் இருக்கும் காட்சிகள் விரைவில் படமாக்கப்படப் போகின்றன. மக்களவை உறுப்பினராகப் பதவி ஏற்ற கையோடு, அவை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுவரும் கமல், டில்லியிலிருந்து வந்தவுடன் படப்பிடிப்பு இருக்கலாம் என்கின்றனர். அதே போல் மற்றவர்களின் கால்ஷீட்டையும் வாங்கி வைத்துவிட்டார் ஷங்கர். இரண்டு மாதங்களுக்குள் மொத்தப் படப்பிடிப்பையும் முடித்து விடலாம் எனத் திட்டமிட்டிருக்கிறதாம் படக்குழு.



ஒரு பக்கம் ஹீரோக்களுடன் டூயட் பாடி வரும் ராஷ்மிகா மந்தனா, இன்னொரு பக்கம் கதாநாயகியை மையப்படுத்தும் கதைகளைத் தேர்ந்தெடுப்பதிலும் கவனம் செலுத்திவருகிறார். "தி கேர்ள் ஃப்ரெண்ட்" படத்தைத் தொடர்ந்து, "மைசா" என்ற படத்தில் நடித்துவருகிறார். பழங்குடியினரின் கலாசாரப் பின்னணி கொண்ட கதை இது. சூர்யாவின் "ரெட்ரோ" ஒளிப்பதிவாளரான ஷ்ரேயாஸ் பி.கிருஷ்ணா இதற்கு ஒளிப்பதிவு செய்துவருகிறார்.

# முகம் 10; சமந்தா!

**1.** மலையாளி அம்மாவுக்கும் தெலுங்கு அப்பாவுக்கும் பிறந்த க்யூட் பார்பி டால். படித்தது பல்லாவரம் செயின்ட் ஸ்டீபன்ஸ் மெட்ரிகுலேஷன், பிறகு தி.நகர் ஹோலி ஏஞ்சல்ஸ், அங்கிருந்து ஸ்டெல்லா மேரீஸில் பி.காம். பாக்கெட் மணிக்காக மாடலிங் வந்தவரை அள்ளிக் கொண்டது சினிமா.

**2.** உடன் நடிக்கும் நடிகர் நடிகைகளுக்கு "சாம்" ஸ்கூல் ரெக்கார்டுகளில் இருக்கிற பெயர் "யசோதா". இதே பெயரில் ஒரு சினிமாவில் நடித்த பெருமை சமந்தாவுக்கு இருக்கிறது.

**3.** ஒளிப்பதிவாளர் ரவிவர்மன் இயக்கிய முதல் படம் "மாஸ்கோவின் காவிரி"யில் கதாநாயகியாக அறிமுகமானார். 11 வருடங்களில் 40 படங்கள் முடித்திருக்கிறார். "விண்ணைத் தாண்டி வருவாயா" தெலுங்குப் பதிப்பில் நடித்தது திருப்புமுனை.

**4.** பாடகி சின்மயி வீட்டு நவராத்திரி விழாக்களுக்கு தவறாமல் வருகை உண்டு. சென்னைக்கு வரும்போதெல்லாம் சின்மயியின் இரு குட்டிச் செல்லங்களைக் கொஞ்சிவிட்டுதான் வந்த வேலையைப் பார்ப்பார். சின்மயியின் கணவர், நடிகர், இயக்குநர் ராகுல் ரவீந்திரன்தான் சமந்தாவின் முதல் ஹீரோ. பிடித்த ஹீரோ சூர்யா! நண்பர்கள் பட்டாளம் நிறைய. சென்னைக்கு வந்தால் ஹோட்டல், தியேட்டர், ரெஸ்டாரன்ட் எனப் பறந்து கொண்டே இருப்பார்.



**5.** தெலுங்கு பிக்பாஸ் சீசனை ஒரு சமயம் தொகுத்து வழங்கிய அனுபவம் உண்டு. பெரிய வரவேற்பைப் பெற்றது அவர் நடத்திய சில வார எபிசோடு. பவன் கல்யாண், மகேஷ் பாபு, ஜூனியர் என்.டி.ஆர் என பெரிய ஹீரோக்களோடும், தயாரிப்பாளர் பெல்லங்கொண்டா சுரேஷின் மகன் சாய் சீனிவாஸ் அறிமுகமானபோது அவருக்கு ஜோடியாகவும் நடித்திருக்கிறார்.

**6.** பெண்களுக்கான "ஏகம் ஆரம்பக்கால கற்றல் மையம்" ஒன்றையும், "பிரதியுஷா" என்ற குழந்தைகள், பெண்களுக்கான தொண்டு நிறுவனம் ஒன்றையும் லாப நோக்கம் இல்லாமல் நடத்திவருகிறார்.

**7.** தென்னிந்திய உணவுகளோடு ஜப்பானிய உணவுகளும் ரொம்பவே இஷ்டம். எந்தப் பெருநகரங்களுக்குப் போனாலும் ஜப்பானிய உணவைத் தேடித்தான் போவார். சத்தமான இசை, சத்தமான இடம் சுத்தமாகப் பிடிக்காது.

**8.** ஆரம்பத்தில் திருமண விழாக்களுக்கான வரவேற்புப் பெண்ணாகப் பணியாற்றிய அனுபவம் உண்டு. அதைப் பற்றி அவரே பேட்டிகளில் சொல்லியிருக்கிறார்.

**9.** உடல்நலம் குன்றியபோது நலச் செய்திகள் இலட்சக்கணக்கில் குவிந்தன. அதனால் தனது ஒவ்வொரு முன்னேற்றத்தையும் பகிர்ந்து கொண்டே இருந்தார். ரசிகர்களோடு நடந்த அந்த உரையாடல்களைத் தொகுப்பாக்கிக் கைவசம் வைத்திருக்கிறார்.

**10.** "கடல்" படத்திலும், "ஐ" படத்திலும் நாயகியாக நடித்திருக்க வேண்டியது. உடல்நலக் குறைவால் வாய்ப்புகள் நழுவியதையும், மணிரத்னம், ஷங்கருடன் பணிபுரியாமல் போய்விட்டதையும் அடிக்கடி நினைவுகூர்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB
DEVELOPMENT LOTTERIES
සංවර්ධන ලොතරැයි මණ්ඩලය

2025.06.01 முதல்
2025.06.30 வரை





# மில்லியனுக்கும் ரூ 157

| | | | |
|---|---|---|---|
| 01 | 02 | 02 | 07 |
| ரூ.2,500,000/- பரிசுகள் | ரூ.2,000,000/- பரிசுகள் | ரூ.1,000,000/- பரிசுகள் | ரூ.250,000/- பரிசுகள் |
| 01 | 01, ශනිදා 01 | 02 | 04 |

| | | |
|---|---|---|
| 47 | 25 | 171 |
| ரூ.200,000/- பரிசுகள் | ரூ.100,000/- பரிசுகள் | ரூ.50,000/- பரிசுகள் |
| 07, 20, 10, 08, ශනිදා 02 | 14, 11 | 23, 07, 115, 15, 11 |

(C-237)

## இலட்சக் கணக்கில் வெற்றியாளர்களை உருவாக்கும் ஒரே லொத்தர்...

அபிவிருத்தி லொத்தர் சபை
இல.356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளெஸ், கொழும்பு 02
தொ.பே. : 0114 824 824

www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

457

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## நீரிழிவு நிலையில் பாதங்களை பராமரிப்பது எப்படி?

(சென்றவாரத் தொடர்ச்சி...)

குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை குருதிக் குளுக்கோஸ் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். நீரிழிவு நோய் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் போது, அவர்களுக்கு நீண்டகால பாதிப்புகள் ஏற்படுவது குறைவாக இருக்கும்.


நீரிழிவு நோயாளிகள் தமது குருதி குளுக்கோஸை மாத்திரம் அல்லாது தமது குருதி அமுக்கம், குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு மற்றும் ஏனைய நாட்பட்ட நோய்களையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும்.

அதேபோல், குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை வைத்திய ஆலோசனைப்படி தமது பாதங்களைப் பராமரிக்க வேண்டும். நீரிழிவு நோயாளிகள் தங்கள் முகத்தை பராமரிப்பது போல பாதங்களையும் பராமரிக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் தமது பாதங்கள் எவ்வாறு இருக்கின்றன என கவனிக்க வேண்டும். அதோடு பாதணிகளையும் கவனிக்க வேண்டியது அவசியம். சில உடற்பருமனான நீரிழிவு நோயாளர்களுக்கு தமது பாதங்களைப் பார்க்க முடியாத நிலை இருக்கலாம். இவ்வாறானவர்கள், கைப்பிடி உள்ள கண்ணாடி மூலமாகவோ அல்லது குடும்பத்தினரின் உதவியுடனோ தமது பாதங்களைப் பரிசோதித்து கொள்ளலாம்.

அடுத்ததாக, மிக முக்கியமாக ஒவ்வொரு நாளும் நீரிழிவு நோயாளர்கள் தமது பாதங்களை நன்கு நீரினால் கழுவிக் கொள்ள வேண்டும். இதற்கு சவர்க்காரத்தைப் பயன்படுத்தலாம். முக்கியமாக விரல் இடுக்குப் பகுதிகள் ஈரலிப்பாக இருப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அப்பகுதிகள் ஈரலிப்பாக இருக்குமானால், Fungus தொற்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். இதனால் பல பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அதேபோல், இந்த நீரிழிவு நோயாளர்களின் பாதங்கள் மிக உலர்வாக காணப்படும். இவ்வாறு உலரும் போது, வெடிப்புகள் ஏற்படுவதோடு, அவ்வெடிப்புகளில் புண்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும். இந்த உலர்வைத் தவிர்க்க, அதற்குரிய சிலவகை Cream களைப் பாவிக்கலாம்.



அடுத்த முக்கியமான விடயம், நீரிழிவு நோயாளிகள் தமது நகங்களைப் பராமரிக்க வேண்டும்.

நகங்களை அவர்கள் வெட்டும் போது, வளைவாக வெட்டாமல், நேராக வெட்ட வேண்டும். ஏனெனில், வளைவாக வெட்டும் போது நகத்தின் ஓரங்களில் காணப்படும் சதைப்பகுதியும் வெட்டப்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது.

அவ் விடங்களில் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. உலகில் பல நாடுகளில் Podiatric எனப்படும் பாதப் பராமரிப்பிற்கான சிறப்பு மருத்துவ சேவைகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் அவ்வாறான வசதிகள் மிகவும் அரிதாகவே இருக்கின்றன.

சில நீரிழிவு நோயாளிகள், தமது பாதங்களைக் கழுவுவதற்காக இளஞ்சூட்டு அல்லது வெந்நீரை பயன்படுத்துவார்கள். ஆனால், இவ்வாறு செய்வதால், அவர்களது பாதங்களில் உணர்ச்சி குறைவாக இருப்பதால் புண்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது. இவை ஆறாத புண்களாக கூட மாறலாம். அடுத்ததாக, பாதணிகள் அற்று, வெளியில் நடப்பதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாதணிகள் இல்லாமல் நடப்பதால், கால்களில் புண்கள் ஏற்பட்டு, அவயவ இழப்பு ஏற்படவும் சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது. எனவே, நீரிழிவு நோயாளிகள் வீட்டிற்குள் நடமாடும் போது ஒரு பாதணியையும், வெளியில் நடமாட வேறொரு பாதணியையும் பயன்படுத்த வேண்டும்.

பல நீரிழிவு நோயாளர்களுக்கு பாதங்களின் அடிப்பகுதியில் Callus ஏற்பட்டிருக்கலாம். இதற்கு அவர்கள் தாமாகவே சிகிச்சை செய்வது ஆபத்தானதாகும். இவ்வாறான தவறான செயற்பாடுகளால், புண்கள் ஏற்பட்டு, பாரிய நீண்டகால பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, நீரிழிவு நோயாளிகளின் பாதம் சம்பந்தமான எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் வைத்தியரை நாடி ஆலோசனையைப் பெற்று சிகிச்சை எடுக்க வேண்டியது அவசியமாகும். High risk foot எனப்படுகின்ற அபாயகரமான பாதங்களை உடைய நீரிழிவு நோயாளர்களுக்கு Multi disciplinary team approach எனப்படும் பல்துறை சார்ந்த நிபுணர்களின் நிபுணத்துவ ஆலோசனை தேவைப்படுகிறது. சில நோயாளிகளுக்கு விசேட வகையான பாதணிகளை உருவாக்க வேண்டிய தேவை ஏற்படும்.

ஆகவே, இந்த நீரிழிவு நோயாளர்களின் பாதப் பராமரிப்பு என்பது பல்துறைசார் வைத்தியர்கள் மற்றும் அனைத்து வகையான சுகாதார உதவியாளர்களின் உதவியுடன் வழங்கப்படக்கூடியதாக இருக்கிறது. நீரிழிவு நோயாளர்கள் தமது அனைத்து உறுப்புகளையும் பாதுகாப்பது போலவே இந்த பாதப்பராமரிப்பிலும் சிரத்தையாக இருக்க வேண்டும். அவர்கள் தினமும் தமது பாதங்களைப் பராமரிக்க வேண்டும். வைத்திய ஆலோசனைப்படி சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எனவே, நீரிழிவு நோயாளி ஒருவர் தமது உடல்நிறையைப் பராமரிப்பதுடன், குருதிக்குளுக்கோஸின் அளவு, குருதி அமுக்கம், குருதியில் இருக்கும் கொலஸ்ரோல் அளவு என்பவற்றைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதன் மூலம் இது போன்ற நீண்டகால பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

(முற்றும்)

Dr.M.அரவிந்தன்
அகஞ் சுரக்கும் தொகுதி
சிறப்பு மருத்துவ நிபுணர்.
யாழ்.போதனா
வைத்தியசாலை.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான சரியான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி தீர்வை வலியுறுத்தி பளையில் போராட்டம்!

(தருமபுரம்)

சமஸ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தும் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் மூன்றாம் வருடத்திற்கான 100 நாள் செயல் முறையின். 9 ஆவது நாள் போராட்டம் நேற்றுக் கிளிநொச்சி பளை பகுதியில் இடம்பெற்றது.

வடக்கு- கிழக்கு தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக முன்வைத்து வரும் சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கையை, இன மத பேதம் என்ற கோஷத் திற்குப் பின்னால் மறைக்க முடியாது என வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

தொடர்ச்சியாக 100 நாட்கள் வடக்கு- கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் குறித்த தரப்பினரால் கவன யீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(8-316)


சிறந்த நிலம் விற்பனைக்கு!
☼ மீசாலை கிழக்கு — வீட்டு நிலம்
☼ அல்வாரை தெற்கு — வீட்டுடன் தென்னங்காணி
☼ கச்சாய் (புங்கடி) — வயல், தென்னங்காணி
விலை பேசத்தக்கது
தொடர்பு 0776 544 540
(சி-240)



லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(4963)
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் உதவி அதிபர்
திருமதி.தர்சினி கருணாகரன்
அவர்களின் அன்புத் தாயார்...



திருமதி.
**இரஞ்சினி குலசேகரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-3614)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி...

எமது பாடசாலையின் அளவையியல் ஆசிரியர் இ.பிரதாபசர்மா அவர்களின் தாயார்
அமரர்.
திருமதி.இரத்தினேஸ்வரா ஐயா
**பகவதி அம்மா**



தோற்றம் 31.03.1936
மறைவு 08.08.2025

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-3609)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,யா/மகாஜனக் கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி.பகீரதி கணேசரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்...



திருமதி.
**இரஞ்சினி பற்குணநாதன்**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-3614)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி.

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 23 - 11 - 1946



விண்ணில் 08 - 08 - 2025

நாகம்மாள் கோயில் வீதி உடுவில் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர். முருகேசு ஜோஜ் திருஞானரட்னம்**

எமது சங்கத்தின் பணியாளரான திரு.**தி.செல்வரொபின்சன்** (களஞ்சிய முகாமையாளர்) அவர்களின் அன்புத் தந்தையாரான அமரர் மு.ஜோ.திருஞானரட்னம் அவர்கள் 08.08.2025 வெள்ளிக்கிழமை அன்று மரணமடைந்துள்ளார்.

இவரது குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-3610)

பிரிவால் துயருறும்- அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
சுன்னாகம்.ப.தெ.வ.அ.கூ. சங்கம். மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

# இராசிபலன்

10.08.2025
ஆடி 25, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை பிற்பகல் 1.31 மணி வரை

அவிட்டம் பிற்பகல் 3.53 மணிவரை
சுப நேரம் 9.04-10. 34மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை

சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்

வளவன்

**மேஷம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், பயணங்கள் கை கூடும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், வழிபாடு இன்பம் தரும் .

**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழல் ஏற்படலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**துலாம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், வளர்ச்சி கூடும் நாள்.

**மகரம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அதிஷ்ட வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பிறர் உதவி உண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்,பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.

**விருச்சிகம்** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வாகன சுகமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**கன்னி** உள்ளன்போடு பழகியவர்களின் ஆதரவு பெருகும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மீனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லதாக அமையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

கடமை தவறாமையை கதிரவனிடம் கற்றுக் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்னை கம்பன் கழகத்தின் பொன்விழா நிறைவு நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சென்னையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் "இயற்றமிழ் அறிஞர்" என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.



முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்த வங்கியில் நிலவும் இரத்த தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப பதிகாரி எம்.பி.ஆர்.ஹேரத் அவர் களின் ஏற்பாட்டில் வைத்தியர் எஸ்.டீ.சமரசிங்கவின் பரிசோதனையின் கீழ் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் கடந்த 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரத்ததானம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. குறித்த இரத்த தானம் வழங்கும் நிகழ்சியில் புதுக்குடியிருப்பு பொலிஸார் இளைஞர்கள். பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு இரத்த தானத்தை வழங்கியிருந்தார்கள்.

(படம்: சதீஸ்)

## கழகங்களுக்கிடையிலான
# வடக்கின் போர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மூளாய் விக்டோரியா விளையாட்டுக்கழகம் மற்றும் கிளிநொச்சி யுனைட்டட் விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் மாபெரும் கிரிக்கெட் சமர் 2 ஆவது வருடமாக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் எஸ் நிசாந்தன், சிறப்பு விருந்தினராக சங்கானை நிலை கிராமசேவகர் அசோகரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார், சிறப்பு விருந்தினராக யா/விக்டோரியா கல்லூரி அதிபர் திருமதி கே.சுலபமதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(3)



சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வதற்கான கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வானது நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை இந்து கல்லூரியில் நடைபெற்றது. பாடசாலைக்குள் ஆன்மீக சிந்தனையை வளர்க்கும் நோக்கில் சிவலிங்கம் ஒன்றிற்கான கோரிக்கையை பாடசாலையின் இந்துமாமன்றத்தினர் முன்வைத்த வேளை சிவபூமி அறக்கட்டளையினரால் சிவலிங்கம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

(படம்: கஜிந்தன்)



யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் 103ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம் பெற்றது.

(படம்: மகாலிங்கம்)




வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் 135 ஆவது ஆண்டினை கொண்டாடும் முகமாக கல்லூரியின் மாணவிகள், பழைய மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மேள தாள வாத்தியங்கள் மற்றும் இசை மழையுடன் நடைபவனி ஒன்றை நேற்றையதினம் மேற்கொண்டனர்.

பாடசாலை முன்பாக ஆரம்பித்த குறித்த நடை பவனியானது இரண்டாம் குறுக்குத் தெரு ஊடாக கண்டி வீதியை அடைந்து அங்கிருந்து மணிக்கூட்டு கோபுர சந்தியை அடைந்து பசார் வீதி ஊடாகச் சென்று ஹொறவப்பொத்தானை வீதி ஊடாக பாடசாலை முன்றலை சென்றடைந்தது.

(படம்: வசந்தரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் இசையரங்கு நிகழ்வில் பாட்டு-நா. ஞானச்செல்வன், வயலின்-செல்வன் குமரேசன் சயந்தன், மிருதங்கம்-க.சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மற்றுமொரு இசையரங்கு நிகழ்வில் பாட்டு-செல்வி-வைஷாலி யோகராஜன், வயலின்-இ. நிறோசன், மிருதங்கம்-ம.லோகேந்திரன், கெஞ்சிரா- அ. சண்முகப்பிரின் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)




# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் வீதி வலம் வரும் காட்சி இடம்பெறும் என ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)

# மகோற்சவம்

(கரணவாய்)

நாகர்கோவில் வடக்கு அருள்மிகு முருகையா தேவஸ்தான வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 16 தினங்கள் உற்சவங்கள் இடம்பெற்று எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை சப்பற உற்சவமும், 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இரதோற்சவமும், 23ஆம் திகதி சனிக் கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று அன்று மாலை கொடி இறக்கமும் இடம்பெறவுள்ளதாக முருகையா தேவஸ்தான நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (8-60)

## கா! நல்லைக் குமரேசனே!

உள்ளத்தில் லுள்ளிட்டு வுருகிவழி படுவோற்கு
ஓர்துயரம் ஒன்றிவருமோ?
பள்ளத்தில் வீழ்ந்தாலும் பரமகுரு கருணையால்
பாய்ந்தோடித் தூக்கியருள்வான்
தள்ளாடும் போதிலும் உள்ளாடு முளத்தினைத்
தள்ளாது கொள்ளவருவான்
அள்ளிடக் குறையாத தெள்ளுதமிழ்க் காவனை
அருநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

# இரத்தான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவபீட- மனித வள முகாமைத்துவ சிறப்புத்துறை 27 ஆம் அணி மாணவர்கள், யாழ். பொலிஸ் அதிகாரிகளுடன் இணைந்து நடத்தும் இரத்ததான நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை யாழ். பிரதான பொலிஸ் நிலையத்தில் நடை பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட சான்றுப் பொருட்களான மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், கை உழவு இயந்திரம், பட்டா வாகனம் என்பன எதிர்வரும் 23.08.2025 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்வதோடு நீதி மன்ற வளாகத்திலிருந்து அன்றைய தினமே அப் புறப்படுத்தல் வேண்டும்.

அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வருகை தர வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## நல்லூர் என்றால் தனி அழகு

பன்னிரு கண்ணில் கருணை அழகு
பட்டொளி வீசும் ஆறுமுகம் அழகு
வண்ண மயிலில் நீஆடி வருவது அழகு
எண்ணத்தில் உன்னை நினைப்பது அழகு
கண்களால் உன் அழகைக் காண்பது அழகு
கவிதையால் உன் புகழ் பாடுவது அழகு
நல்லூர் என்றால் தனி அழகு
நாம் வணங்கும் முருகனோ பேரழகு

விஜியகண்ணன், யாழ்ப்பாணம்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 230 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 200 | 160 |
| தக்காளி | 150 | 200 | 250 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 |
| கோவா | 300 | 300 | 280 | 200 |
| கரட் | 450 | 550 | 600 | 380 |
| பூசணி | 100 | 140 | 70 | 80 |
| புடோல் | 100 | 100 | 200 | 120 |
| வாழைக்காய் | 150 | 130 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 350 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 150 | 110 |
| பாகற்காய் | 400 | 450 | 300 | 350 |
| வெண்டக்காய் | 150 | 100 | 150 | 100 |
| கருணைக் கிழங்கு | 300 | 320 | 250 | 250 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 150 |
| லீக்ஸ் | 400 | 250 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 150 | 150 | 130 |
| கறிமிளகாய் | 600 | 500 | 500 | 480 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 500 | 230 |
| போஞ்சி | 700 | 800 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 300 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 40-120 | 150 | 80 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 100-250 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-220 |
| இராசவள்ளி | 800 | 700 | 700 | 500 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 300 | 250 |
| முள்ளங்கி | 150 | 140 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 150 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 100 |

## நல்லூர் உற்சவ கால அருளுரை

(யாழ்ப்பாணம்)


நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் அருளுரை இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிமுதல் 8.30 மணிவரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "நீதான் சற்றும் நினைந்திலையே" எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)

## நல்லூரான் திருவடிக்கு

கல்லில் உளி தீட்டி
கற்சிலையாய் உருவாக்கி
சொல்லில் பாமாலை சூடி
பண் இசையுடன் பாடி
நல்லூரான் திருவடிக்கு
வலம்புரியில் சமர்ப்பணம் செய்து
எல்லோரும் இன்புற்றிருக்க
வேண்டிப் பாடினேன் முருகையா

இராம ஜெயபாலன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்.ஸ்புட்ணி கழகம் நடத்தும் வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி


யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாணம் ஸ்புட்ணி விளையாட்டுக் கழகம் நடாத்தும் யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுண்டுக்குளி பழைய பூங்கா வலைப் பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டங்களில் "பி" பிரிவினருக்கான போட்டியில் வதிரி பொம்மேர்ஸ் அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டு கழகமும், ஏ பிரிவினருக்கான போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து மூளாய் விக்றோறியன் அணியும், 40 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர் அணியும் மற்றும் 14 வயதிற்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டமும் நடைபெறவுள்ளது.

ஸ்புட்ணி விளையாட்டுக் கழக தலைவர் சூ.அகிலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-90)

# FIA போர்முலா 3 ஆவது போட்டிக்கு தகுதி பெற்ற முதல் இலங்கையர்

## 18 வயதில் சாதனை!




18 வயதுடைய வீரர் யுவன் டேவிட், 2026 FIA Formula 3 சீசனில் பங்கேற்கும் முதல் இலங்கையர் என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றுள்ளார்.

யுவன் டேவிட் AIX ரேசிங் அணியுடன் 2026 சீசனுக்காக ஒப்பந்தம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது யூரோஃபார்முலா ஓபன் சம்பியன்ஷிப்பில் பங்கேற்கும் யுவன், புள்ளிகள் தரவரிசையில் இரண்டாமிடத்தில் உள்ளார்.

2024 ஆம் ஆண்டு F4 ஸ்பானிஷ் மற்றும் UAE F4 சாம்பியன் ஷிப்பில் பங்கேற்று, ஒற்றை இருக்கை பந்தயத்தில் தனது முதல் முழு சீசனை நிறைவு செய்த இவர், கார்ட்டிங் கிலிருந்து பந்தயக்கார்களுக்கு மாறிய பின்னர் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

யுவன் தனது ஒப்பந்தம் குறித்து கூறுகையில், "இலங்கையின் முதல் வீரராக FIA Formula 3 இல் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்ததற்கு மிகவும் நன்றியுடையவனாக உள்ளேன்.


AIX ரேசிங்குடன் இணைந்து பெரிய மைல்கற்களை எட்டுவதற்கு ஆவலாக உள்ளேன்," என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 2024ஆம் ஆண்டு மொன்ஸாவில் யூரோஃபார்முலா ஓபன் பந்தயத்தில் இரு வெற்றிகளைப் பெற்று, இலங்கையின் தேசியக் கொடியை பறக்கவிட்டார்.

FIA மோட்டார்ஸ்போர்ட் கேம்ஸில் 2022இல் கார்ட்டிங் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றவர். இவரது இந்தப் பயணம், இலங்கை மோட்டார் ஸ்போர்ட்டை உலக அரங்கில் பிரகாசிக்க வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# சென்னை அணியை விட்டு வெளியேறும் அஸ்வின்

## அதிர்ச்சியில் இரசிகர்கள்!




ரவிச்சந்திரன் அஸ்வின் 2025 ஐ.பி.எல் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார். 2025 ஐ.பி.எல் ஏலத்தில் சி.எஸ்.கே அவரை 9.75 கோடி ரூபாய்க்கு வாங்கியது. அஸ்வின் 2008 முதல் 2015 வரை சி.எஸ்.கே அணிக்காக விளையாடியவர் பின்னர் பல அணிகளுக்காக விளையாடி 2025 இல் மீண்டும் சி.எஸ்.கேவுக்கு திரும்பினார்.

இந்நிலையில் 2026 ஐ.பி.எல் தொடருக்கு முன்பாக சி.எஸ்.கே அணியில் இருந்து தன்னை விடுவிக்குமாறு அஸ்வின் கேட்டுக் கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சமீபத்தில் ராஜஸ்தான் அணியில் இருந்த தன்னை விடுவிக்குமாறு சஞ்சு சாம்சன் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ள நிலையில் சி.எஸ்.கே அணியில் இருந்து அஸ்வினும் வெளியேற உள்ளது ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அஸ்வின் ஐ.பி.எல் வரலாற்றில் 212 போட்டிகளில் 180 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

# மகளிர் ரி-20 கிரிக்கெட்

# பாகிஸ்தானை வீழ்த்தி அயர்லாந்து அபார வெற்றி



பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வருகிறது. 3 போட்டிகளும் பெல்பாஸ்டில் நடைபெற உள்ளன. அதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதல் போட்டியில் பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி அளித்த அயர்லாந்து 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் அயர்லாந்து 1-0 என முன்னிலையில் இருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது ரி-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 168 ஓட்டங்கள் எடுத்தது.

தொடர்ந்து 169 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய அயர்லாந்து அணி 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 171 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை அயர்லாந்து கைப்பற்றியது. இரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவது ரி-20 போட்டி இன்று நடைபெறவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி வழியே இறைவனைத் தேடுவோம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒலிபெருக்கிப் பயன்பாடும் குருமுதல்வரின் கோரிக்கையும்

கத்தோலிக்கத் தேவாலயங்களில் திருநாட்களின்போது ஒலிபெருக்கியைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துமாறு யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தேவாலயங்களில் இடம்பெறும் வழிபாடுகளின்போது பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிச் சாதனங்களினால் ஆலய சுற்றாடலில் வாழும் மாணவர்கள், நோயாளர்கள், வயோதிபர்கள் ஆகியோருக்கு இடையூறுகள் ஏற்படும்.

எனவே ஞாயிறு திருப்பலிகளின்போது தேவாலயங்களுக்குள் மட்டும் கேட்கும்படியாகவும் திருநாட்களின்போது, ஆலய வளாகத்துக்குள் மட்டும் கேட்கும்படியாகவும் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துமாறு குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் ஆலோசனை கூறியுள்ளார்.

அடிகளார் முன்வைத்த கோரிக்கையை முதலில் வரவேற்க வேண்டும்.

இங்கு அவர் கத்தோலிக்க தேவாலயங்களுக்கு மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளாராயினும் ஒலிபெருக்கிப் பயன்பாட்டில் சைவ ஆலயங்களும் குறைந்தவையல்ல.

ஆலயத் திருவிழாக்கள் தொடங்கிவிட்டால், வீதி நெடுகிலும் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி அந்தச் சூழல் முழுமையிலும் சத்தத்தை ஏற்படுத்துகின்ற நிலைமை உள்ளது.

குறிப்பிட்ட ஆலயங்கள் மிகவும் அடக்கமாக ஒலிபெருக்கியைப் பயன்படுத்தும்போது, கணிசமான ஆலயங்கள் ஒலிபெருக்கிகளைக் கண்டபாட்டில் பயன்படுத்துகின்றன.

இதன் காரணமாக, குருமுதல்வர் கூறியது போல மாணவர்களும் ஏனையவர்களும் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் ஒலிபெருக்கிப் பயன்பாட்டால் ஆலய நிர்வாகத்துக்கும் ஆலயச் சூழலில் வசிப்பவர்களுக்கும் இடையே முரண்பாடுகளும் ஏற்படுகின்றன.

உண்மையில் ஒலிபெருக்கியை அடக்கமாகப் பயன்படுத்தும்போது அஃது தெய்வீகத்தை மேலும் வலுப்படுத்துவதாக இருக்கும்.

என்ன செய்வது ஒரு காலத்தில் அடியார்கள் ஆலயத் திருவிழாக்களுக்குச் சென்று வழிபாடாற்றினர்.

ஆனால் இப்போது மந்திர உச்சாடனங்கள் ஒலிபெருக்கி மூலமாக அதிருகிறது. தவில் நாதஸ்வரங்கள் முழங்குகின்றன.

ஆனால் அந்த ஆலயத்தில் வழிபடுவதற்கு அடியார்கள் எவருமே இல்லை. அந்தளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

ஆக, இப்போது திருவிழா என்பது ஒலி பெருக்கியில்தான் நடக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டும். ஒலி பெருக்கிப் பயன்பாட்டைக் கடுமையாக மட்டுப்படுத்த வேண்டும். இதைச் செய்யாதவிடத்து ஆலய நிர்வாகங்களும் அயலவர்களும் முரண்பட்டு மோதிக் கொள்கின்ற துர்ப்பாக்கிய நிலைமைகளும் உருவாகலாம்.

உண்மை. ஓர் ஊரில் ஒரு மதகுரு அந்த ஊர் முழுவதும் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி தனது போதனைகளை நாள்தோறும் ஒலிக்க விட்டிருந்தார். அதனால் மாணவர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர்.

இவ்வாறான சூழ்நிலையில் யாழ்.மறை மாவட்ட குருமுதல்வரின் அறிக்கை குறித்து அனைவரும் கவனம் செலுத்துவது அவசியமானதும் கட்டாயமானதுமாகும்.

# இராணுவத்தின் இனவெறி அடங்காத நிலையில் தமிழ் மக்கள் எவ்வாறு பாதுகாப்பாக வாழ முடியும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் காட்டம்

(கொழும்பு)

இராணுவம் தொடர்ந்தும் அதே இன வெறியுடன் செயற்பட்டால் வடக்குக்கிழக்கில் இருக்கின்ற எந்தவொரு தமிழ் மக்களும் எவ்வாறு பாதுகாப்பாக வாழமுடியும் எனத் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியெழுப்பியுள்ளார்.

முத்தையன்கட்டு விவகாரத்துக்குக் கடும் கண்டனம் வெளியிட்டுள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எங்களிற்குக் கிடைத்த தகவலின்படி இளைஞனின் படுகொலை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கொலையே. அவர் முகாமிற்குச் சென்ற பிறகு அவரைக் கொலை செய்து குளத்தில் போட்டிருக்கின்றார்கள் என அங்கிருக்ககூடியவர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் வடக்குகிழக்கில் குறிப்பாக முல்லைத்தீவில் இரண்டு பொது மக்களுக்கு ஒரு இராணுவசிப்பாய் என்ற அடிப்படையில்தான் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

அங்கு கொலை நடந்தால் கூட இராணுவத்திற்கு தெரியாமல் நடக்க முடியாத நிலைதான் காணப்படுகின்றது.

போர் குற்றங்களுக்கு இராணுவத்தினர் முழுமையாகப் பொறுப்புக் கூறவைக்கின்ற வரைக்கும் இராணுவத்தில் இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றம், போர்க் குற்றங்கள் போன்றவற்றில் ஈடுபட்ட முழுப் பேரும் அதிலிருந்து முழுமையாக அகற்றப்படும் வரையிலாவது அந்த இராணுவம் வடக்குக் கிழக்கிலிருந்து அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் முன்வைப்பதற்குக் காரணம் எங்களிற்கு ஏதோ விசர் என்பதற்காக இல்லை. அவர்கள் அங்கிருக்கக் கூடாது. அந்த மக்களிற்கு அவர்கள் அங்கிருப்பதே பாரிய ஆபத்து என்பதாலேயே,

இராணுவம் தொடர்ந்தும் அதே இனப்படு கொலை வெறியில் இருக்கின்ற வரைக்கும், முல்லைத்தீவிலோ - வடக்குக் கிழக்கிலோ எந்தவொரு தமிழ் மக்களிற்கும் பாதுகாப்பு இருக்கப் போவதில்லை என்றார். (ம-7)

## வீடொன்றில் திடீர் தீ விபத்து 7 வயதுச் சிறுவன் உயிரிழப்பு

பலாங்கொடை, மஹவத்தப் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

தீப்பரவல் குறித்து பலாங்கொடை பொலிஸ் அவசர தொலைபேசி எண்ணுக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சிறுவனின் சடலத்தை மீட்டுள்ளனர். சம்பவத்தின் போது உயிரிழந்த சிறுவனின் தந்தை வீட்டில் இருந்ததாலும் தீ விபத்தில் அவருக்குக் காயம் ஏற்படாததால் இந்த மரணம் தொடர்பில் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பலாங்கொடைப் பதில் நீதவான் விசாரணைகளை மேற்கொண்டதோடு சிறுவனின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கையிடுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

சிறுவனின் சடலம் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளைப் பலாங்கொடைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## ஐஸ் போதைப்பொருட்களுடன் கம்பஹாவில் ஒருவர் கைது

(கம்பஹா)

கம்பஹா உன்னருவப் பகுதியில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் குழுவிற்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 1.66 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 308 கிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபர் மினுவாங்கொடைப் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனவும் மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபரை சான்றுப்பொருட்களுடன் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மினுவாங்கொடைப் பொலிஸார் தெரிவித்தனர்.(ம-7)

## திருக்கோவில் பகுதியில் கைக்குண்டு மீட்பு

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வம்மியடிப்பகுதியில் இருந்து 5 கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களின் உறுதிப் பாகங்கள் என்பன நேற்று மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட அரச புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, வம்மியடி பகுதியின் ஊடாக செல்லும் பரந்த ஆற்றுப் பகுதியில் காணப்படும் மரம் ஒன்றின் அடியில் நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 5 கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களின் பாகங்கள் சிலவற்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேலும் குறித்த இடத்தில் விடுதலைப் புலிகளின் முகாம் இருந்துள்ளமையால் மேலும் பல ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை விஸ்தீரணம் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கொள்கலன் வீழ்ந்து விபத்து கனரக வாகன சாரதி மரணம்

### கொழும்புத் துறைமுகத்தில் சம்பவம்

பாரிய கொள்கலன் ஒன்று வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் கனரக வாகன சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்புத் துறைமுக கொள்கலன் முனையத்தில் பிரைம் மூவர் ரக வாகனத்தில் பாரிய கொள்கலன் ஒன்றை ஏற்றுவதற்கு முயற்சிக்கும்போது அந்தக் கொள்கலன் மற்றொரு கொள்கலனுடன் மோதி வாகனத்தின் மீது வீழ்ந்துள்ளது.

இதன்போது சாரதி பலத்த காயமடைந்த நிலையில்உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் தெடிகமவைச் சேர்ந்த 36 வயதுடைய சாரதியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் வாயிலாகத் தெரியவந்துள்ளதுடன் முதற்கட்ட விசாரணையின் அடிப்படையில் கொள்கலனை க்ரேன் இயந்திர இயக்குநரைக் கொழும்புத் துறைமுகப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிய மணல் அகழ்வுக்கு எதிராக மன்னாரில் தொடர் போராட்டம்!



(மன்னார்)

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி 2 ஆவது கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரம் அமைக்கும் நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவற்றிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தொடர்ச்சியாக மன்னார் பஜார் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று சனிக்கிழமை 7 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் மன்னார் பேசாலை கிராம மக்கள் கலந்து கொண்டு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் தீவு பகுதியில் 2ஆவது கட்டமாக காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிய காற்றாலைகளின் பாகங்கள் வாகனங்களில் மன்னார் நகர பகுதியை நோக்கி எடுத்து வரப்பட்ட நிலையில் மன்னார் தள்ளாடி சந்தியில் ஞாயிற்றுக்கிழமை மாலை மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் தள்ளாடி சந்தி மற்றும் மன்னார் சுற்றுவட்ட பகுதியில் தொடர்ச்சியாக மக்களும், பொது அமைப்புக்கள் இணைந்து சுழற்சி முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில், மக்களின் எதிர்ப்பையும் மீறி காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பாகங்கள் மன்னார் நகர பகுதிக்கு பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் எடுத்து வரப்பட்டது.

எனினும் தொடர்ச்சியாக போராட்டங்கள் இடம் பெற்று வந்தது. இந்த நிலையில் குறித்த போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் மன்னார் பேசாலை கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பேருந்துகள் மூலம் நேற்று சனிக்கிழமை வருகை தந்து குறித்த போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் கலந்து கொண்டு தமது ஆதரவை வழங்கினர்.

மேலும் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் கனிய மணல் அகழ்வுக்கு நாங்கள் ஒரு போதும் அனுமதி வழங்க மாட்டோம் எனவும் மன்னார் தீவை அழிவு பாதைக்கு கொண்டு செல் லும் குறித்த இரு திட்டங்களையும் நிறுத்த ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மன்னார் நகர சுற்று வட்டத்தில் இருந்து பதாகைகளை ஏந்தியவாறு மாவட்டச்செயலக பிரதான வீதியூடாக சென்று மீண்டும் நகர சுற்று வட்ட பகுதியை சென்றடைந்தனர். (8-285)

# முல்லையில் பொது விளையாட்டுக்கட்டம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

## ரவிகரன் எம்.பி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுவிளையாட்டுக் கட்டடத்தொகுதியை அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலேயே அமைச்சரிடம் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது மாவட்டங்கள் தோறும் இளைஞர்கழக சம்மேளனங்களைத் தெரிவுசெய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் இளைஞர்கழக சம்மேளனம் தெரிவுசெய்யப்பட்டது

இருப்பினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுத்துறைசார்ந்து பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

கடந்தகாலத்தில் மாவட்டங்கள்தோறும் அமைக்கப்பட்ட பொதுவிளையாட்டுக் கட்டடத்தொகுதி முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்படவில்லை.

எனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது விளையாட்டுக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (8)

# முல்லைத்தீவில் இளைஞன் உயிரிழப்பு நீதியான விசாரணை வேண்டும்!

## ஜெகதீஸ்வரன் எம்.பி

(வவுனியா)

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவ முகாமிற்குள் சென்ற இளைஞர்கள் தாக்கப்பட்டமை மற்றும் மரணமடைந்தமை தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்படும் என தேசிய மக்கள் சக்தியில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, முத்தையன்கட்டு இராணுவ முகாமுக்குள் 7 இளைஞர்கள் சென்றதாகவும், அவர்கள் இராணுவத்தால் விரட்டப்பட்டதாகவும், தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளதுடன் தப்பி ஓடிய ஒருவர் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் மற்றும் முல்லைத்தீவு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், பிரதேச செயலாளர் ஆகியோருடன் தொலைபேசியில் பேசியிருந்தேன். பொலிஸார் இது தொடர்பில் நீதியான வகையில் விசாரணைகளை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளனர். அத்துடன் எமது உயர்மட்ட அமைச்சர்களுக்கும் இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளேன். அவர்களும் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளனர்.

ஆகவே, இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை தன்மையினை வெளிப்படுத்தி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (8-250)

# கிளிநொச்சி நகர அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்!

## கரைச்சி பிரதேசசபை தவிசாளர் வேழமாலிகிதன்

(தருமபுரம்)

கிளிநொச்சி என்ற பெருநகர அபிவிருத்தியின் ஆரம்பமே கனகபுரம் முதல் சேவியர் கடைச்சந்தி வரையான வீதி அபிவிருத்தி வர்த்தகர்கள் தங்களின் சுய நலங்களை மறந்து பொது நலமாக சிந்தித்து ஒத்துழைப்பு வழங்குங்கள் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

கனகபுரம் முதல் கிருஸ்ணபுரம் வரையான இரு வழிப்பாதை அபிவிருத்திக்கான ஆரம்ப கட்ட பணிகளின் முதல் கட்டமாகவே கடந்த வியாழக்கிழமை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர் மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் சேர்ந்து அகற்ற முற்பட்ட போது முரண்பாடுகள் ஏற்பட்டன.

2017 ஆம் ஆண்டே குறித்த வீதி அபிவிருத்தி இடம்பெறுவதற்குரிய சந்தர்ப்பம் இருக்கும் என்ற நிலையில் வீதியின் மையத்திலிருந்து நூறு அடிக்கு அப்பால் கடைகள் அமைக்கப்படவேண்டும் என அப்போதைய செயலாளரினால் நீதிமன்ற அனுமதி கூட பெறப்பட்டிருந்தது.

வர்த்தக சங்கம் மற்றும் சேவைச்சந்தை வர்த்தகர்கள் நீண்டநாள் கோரிக்கையை கூட முன்வைத்திருந்தனர்.

நடை பாதை வியாபாரிகளினால் தமது வாழ்வாதாரம் பாதிப்பதாக தெரிவித்தனர்.

அதற்கு அமைய சபையின் விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு 37உறுப்பினர்களின் ஏக மனதான தீர்மானத்துடனே நடை பாதை வியாபார நிலையங்கள் அகற்றுவதாக தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் மூன்றிற்கு மேற்பட்ட தடவைகள் அறிவிக்கப்பட்ட நிலையில் அகற்றப்படாமையினாலேயே திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்தன.

இதன்போது முரண்பாடுகள் ஏற்பட்டன. தொடர்ந்து வர்த் தகர்களுடன் பேசி குறித்த அபிவிருத்தி முன்னெடுப்பதற்கு அரசியல் காழ்புணர்ச்சிகளை தவிர்த்து பொது நலமாக சிந்தித்து கிளிநொச்சி பெருநகர அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவித்தார். (8-316)

# சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி வவுனியாவில் போராட்டம்



(வவுனியா)

சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் மூன்றாம் வருடத்திற்கான 100 நாள் செயன்முறையின் 8 ஆவது நாள் போராட்டம் நேற்று முன்தினம் காலை வவுனியா யாழ் வீதியில் இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக முன்வைத்து வரும் சமஷ்டி முறையிலான அரசியல் அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கையை இன,மத,பேதம் என்ற கோஷத்திற்குப் பின்னால் மறைக்க முடியாது என வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழு சுட்டிக்காட் டியுள்ளது.

தொடர்ச்சியாக 100 நாட்கள் வடக்கு-கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் குறித்த தரப்பினரால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று இராணு...

மூன்று இராணுவத்தினர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு முத்தையன்கட்டு இராணுவ முகாமுக்குள் அழைக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட இளம் குடும்பஸ்தரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் ஆறு இராணுவ வீரர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் மூன்று இராணுவ வீரர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நீதவான் த.பிரதீபன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் இராணுவ வீரர்கள் மூவரையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-7,250,299)

## அத்துமீறி...

ஒப்படைக்கப்பட்டார் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு முத்தையன்கட்டில் இளம் குடும்பஸ்தர் மரணம் தொடர்பில் இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இது குறித்து இராணுவப் பேச்சாளரைத் தொடர்பு கொண்டு ஊடகவியலாளர்கள் வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமது முகாமுக்குள் அத்துமீறி பிரவேசித்த 5 பேரை, தமது இராணுவம் பின்தொடர்ந்ததாகவும் அதில் ஒருவர் பிடிக்கப்பட்டு, அவரின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் ஏனையோர் தப்பிச் சென்றதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் வரையிலான விடயங்களில் மாத்திரமே இராணுவம் தொடர்புபட்டிருப்பதாகவும் அதன் பின்னர், இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டமைக்கும் இராணுவத்துக்கும் தொடர்பில்லை என்றும் தெரிவித்தார்.

எனினும் பொலிஸாரின் விசாரணைகளுக்குப் படையினர் முழு ஒத்துழைப்பை வழங்கி வருவதாக இராணுவப் பேச்சாளர் கூறினார்.

இதன்போது படையினர் கைது செய்யப்பட்ட தகவல் தொடர்பில் வினவியபோது,

இதற்குப் பதிலளித்த இராணுவப் பேச்சாளர், பொலிஸாரின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தாம் சம்பவத்துடன் தொடர்புடைய படையினரை விசாரணைக்காக அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்தார். (ம-7,250,299)

## பணி நீக்கம்...

பட்ட ஐவரில் தாதி உத்தியோகத்தர் உட்பட மூவர் நேற்று சனிக்கிழமை (9) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் கடந்த வருடம் ஜூலை மாதம் 28 உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா என்ற பட்டதாரியான இளம் குடும்பப் பெண்ணின் மரணத்திற்கு நீதி கோரி வழக்கு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில்,

மருத்துவக் கவனயீனத்தால் ஏற்பட்ட அதீத இரத்தப்போக்குக் காரணமாக குறித்த இளம் தாயின் மரணம் சம்பவித்துள்ளது என மருத்துவப் பரிசோதனை அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடமையில் இருந்த மருத்துவர் ஒருவர் உள்ளடங்கலாக இரண்டு தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக குறித்த ஐவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் குறித்த ஐவரில் தாதிய உத்தியோகத்தர் ஒருவரும் இரண்டு குடும்ப நல உத்தியோகத்தர்களும் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்றைய தினம் சனிக்கிழமை (9) மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது மன்னார் நீதவான் குறித்த மூவரையும் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை ஏனைய சந்தேக நபர்களான மருத்துவர், தாதிய உத்தியோகத்தரையும் கைது செய்ய உயிரிழந்த மரியராஜ் சிந்துஜா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்துள்ளார்.

குறித்த வழக்கு விசாரணை மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்று தவணையிட்டுள்ளது. (ம-7,285)

## வாளுடன்...

பிரிவிற்குட்பட்ட பொன்னாலைப் பகுதியில் வாளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

முதலிகோவில் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் வாளினைக் கையில் வைத்திருந்தவேளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## குறி...

விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று குறிகாட்டுவான் இறங்குதுறைக்கு துறைசார் அதிகாரிகளுடன் நேரடியாக விஜயம் மேற்கொண்டு, அதிகாரிகளுக்கு ஆலோசனைகளையும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் உரிய அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

மேலும், அமைச்சர் அவர்களுடன் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரும் கலந்து ஆலோசனைகளை முன்வைத்திருந்தார்.

மேலும் அமைச்சர்களுடனான விஜயத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் குரூஸ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், நெடுந்தீவுப் பிரதேச செயலாளர், வேலணை உதவிப் பிரதேச செயலாளர், கடற்படை அதிகாரிகள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டார்கள். (ம-7,33)

## புங்குடுதீவில்...

ஊர்காவற்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து படகு தொடர்பிலான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம-7,33,104)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.08.09
சீட்டிழுப்பு இலக்கம் 5916
Y 4 7 9 1 8 3
அத சம்பத
Y 9 1 8 3
சீட்டிழுப்பு இலக்கம் 0491
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.08.09
சீட்டிழுப்பு இலக்கம் 0632
கும்பம் 07 09 27 31

தன நிதானய
திகதி - 2025.08.09
சீட்டிழுப்பு இலக்கம் - 1946
B 20 37 65 82 B
Double Chance 93181

மெகா பவர்
திகதி 09/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2264
Z 06 43 45 76 77

ஜய
திகதி 2025.08.09
சீட்டிழுப்பு இலக்கம் 0184
G 7 4 0 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4158
சீட்டிழுப்பு திகதி 09.08.2025
V 52 58 63 76
V
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.09
சீட்டிழுப்பு இலக்கம் 1225
மேடம் 04 15 56 62 மேடம்
65374

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பிரி டன சம்பத
09.08.2025 வெற்றி வாரம் 0624
J 8 8 5 1 4 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,619,984.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2890
சீட்டிழுப்பு திகதி 2025.08.09 தினம் சனிக்கிழமை
02 22 34 63 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,647,180.00
DLB

சனிதா
திகதி 09.08.2025 வெற்றி வாரம் 5051
01 22 57 72 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,508,177.60
DLB

சசிரி
744
09.08.2025
சனிக்கிழமை
13 16 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4602
சீட்டிழுப்பு திகதி 09.08.2025 தினம் சனிக்கிழமை
20 44 46 62 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 02 30 49 61 66
2066
09.08.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.586,894,491.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2716
சீட்டிழுப்பு திகதி : 2025.08.09
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,279,045.60
21 32 46 70 K
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா பொதிகள் சேவை
யாழ்ப்பாணம்



- UK - 1,350/- 16+
- France - 2,050/- 16+
- Germany - 1,950/- 16+
- Canada - 2,600/- 16+

தேவை
வேலையாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
யாழ்நகரத்துக்கு அண்மையில் இருப்போர் விரும்பத்தக்கது. (4949)

**075 330 5500 / 070 330 5500**

## காணி விற்பனைக்கு
சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் வீதியில் கதிரமலை சிவன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள 4 பரப்புக் காணி விற்பனைக்கு. (C-3556)

**077 504 5783**

## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

- 5-9 Kg 3710/-
- 11-16 Kg 2660/-
- 21-27 Kg 2480/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery (C-3617)

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/- Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## பணியாளர் தேவை
யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றிற்கு தூய்மைப் பணியாளர் (Cleaning Staff) தேவை.
வேலை நேரம் : காலை 8.00 – மாலை 5.30 மணி வரை.
அனுபவம் : தூய்மை பணியில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (1421)

தொடர்பு : **077 985 7800**

## காணி விற்பனைக்கு
சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட A9 வீதி நுணாவில் பகுதியில் இருந்து பருத்தித்துறை வீதியில் 1 Km தூரத்தில் உள்ள தாழையடி துர்க்கை அம்மன் வீதியில் 100m தூரத்தில் உள்ள தென்னங்காணி 18 பரப்பு மொத்தமாக விற்பனைக்கு உண்டு. (C-3613)

**077 36 21 694, 077 31 54 188, 077 69 34 810**

## விற்பனைக்கு
குதிரை போட் 25 H.P Susiki 32 Pcs சூடை வலை முற்றிலும் புதியவை (தயார் நிலையில்) சிறு கழிவுடன் விற்பனைக்கு (C-3611)

**077 357 3055**
வல்வெட்டித்துறை

## சிங்களம் கற்போம்
(72ஆவது குழு)
வெறுமனே 05 நாட்களில் சிங்களம் பேசுவதற்கான பயிற்சி அரச - அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் அனைவருக்கும் மற்றும் தரம் 6 - 11 வரை கற்கும் மாணவர்களுக்கு Syllabus அடிப்படையில் கற்றுக் கொடுத்து அதிக புள்ளிகளைப் பெறுவதற்கான வாய்ப்பு.
உங்கள் வீடுகளுக்கே வந்து கற்றுக் கொடுக்கப்படும். (5003)

தொடர்பு : **077 695 4530**

## வீட்டுப் பணிப்பெண் தேவை
யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புக்கு : (5009)
**075 498 5400, 077 937 0000, 021 221 7600**

## திருநெல்வேலிச் சந்தி அருகில் காணி விற்பனைக்குண்டு
- 1 ½ பரப்பு
- 2 பரப்பு
- 2 ½ பரப்பு
- பலாலி வீதி - 50m தூரம்
- மக்கள் வங்கி - 100m தூரம் (5013)

**077 253 2575**

## விற்பனைக்கு
நல்ல நிலையில் ரீ கெண்டிசன் செய்யப்பட்ட யப்பான்
- சுப்பர்கப் 90
- சுப்பர்கப் 50

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு (5000)

**077 656 6508**

## காணி விற்பனைக்கு
சுதுமலை அம்மன் ஆலயத்தில் இருந்து மிக அண்மையில் பிரதான வீதியில் இருந்து 2 ம் காணி 50m 1 பரப்பின் விலை 60.00000/= (4940)

**076 428 4896**

## உடனடி வேலைவாய்ப்பு
வடமராட்சியில் நன்மதிப்பைப் பெற்ற பிரபல்யமான, பல கிளைகளைக் கொண்ட வெதுப்பக உற்பத்தி நிறுவனத்திற்கு கீழ் காணும் வேலைவாய்ப்பிற்கான வெற்றிடம் காணப்படுகின்றது.
- கிளை முகாமையாளர் (Branch Manager) - 2

மேற்குறிப்பிட்ட வேலைக்கு அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். (குறிப்பு: இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.) (4996)

தொடர்புகளுக்கு : **077 269 0764**

## காணி விற்பனைக்கு
**யாழ்ப்பாணம் இராச பாதை வீதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

நிலப்பரப்பு
- பிரதான இராச பாதை வீதியில் இருந்து 2ஆவது காணி 50 Mதூரத்தில் உள்ளது.
- 20 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்டநிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- இக்காணியில் இருந்து திருநெல்வேலி பிரதான சந்தை கல்வியங்காடு பிரதான சந்தை 1½ km தூரம்.
- நல்லூர் ஆலயம் 2 km தூரம்.
- ஒரு பரப்பின் விலை 69 லட்சம் (5001)

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு: **ஜெயம்**
**077 814 7389, 077 986 5457**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 208/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 240/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 350/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg சம்பா அரிசி | - 230/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 188/= | Max 3Kg |
| 1Kg தீட்டல்பச்சை | - 239/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2650/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 185/= | |
| 1Kg கீரிச்சம்பா | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 1100/= | |
| 1Kg கடலை | - 384/= | |
| 1Kg சோயா | - 330/= | |
| அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |







தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk
இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1427)
Happy Supermarket 0777 8080 30

## 22 விற்பனைக்கு 22
01. யாழ்.கே.கே.எஸ் வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
02. யாழ்.கே.கே.எஸ் வீதியில் பன்றிக் கோட்டு பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
03. யாழ்.கே.கே.எஸ் வீதியில் மனோகராத் தியேட்டருக்கு அண்மையில் 2½ பரப்பில் அமைந்த காணியும் வீடும்
04. யாழ்.கே.கே.எஸ் வீதியில் தாவடி வீதிக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்
05. யாழ்.கே.கே.எஸ் வீதியில் தாவடி வீதிச் சந்திக்கு அண்மையில் 2பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும்
06. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும் 216 அடி நீளம் கொண்ட 2 கடைகளும்
07. யாழ்.மின்சாரநிலைய வீதியில் C.T.B தரிப்பிடத்திற்குப் பின்பாக 16 அடி அகலமும் 100அடி நீளமும் கொண்ட 2 கடைகளும்
08. யாழ்.கஸ்தூரியார் வீதியில் நான்கு கடைகளும்
09. யாழ்.பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும்
10. யாழ்.மின்சார நிலைய வீதியில் 3 பரப்புக் காணியும்
11. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக் காணியும்
12. யாழ்.குறொஸ் வீதியில் 10 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. (C-3618)

**077 723 2535**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org